கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
மாதம் இருமுறை
15-10-72
30காசு





ஆஹா!
என்ன இனிமை,
என்ன சுவை!
பல வண்ண
காட்பரிஸ்
மில்க் சாக்கலேட்
ஜெம்ஸ்
GEMS
ஆட்டமும்
பாட்டும்
களிப்பூட்டுமே,
காட்பரிஸ்
ஜெம்ஸ்
இனிப்பூட்டுமே!
ரூ.1
மட்டுமே
AIYARS-C.165 TM

கோகுலம்

மலர் 1 :: இதழ் 13

அக்டோபர் 15, 1972

பரிதாபி, புரட்டாசி 29



சந்தா விவரம்:


தனிப் பிரதி விலை 30 காசு

ஒரு வருடம் ரூ. 7-00

ஆறு மாதம் ரூ. 3-50

வெளி நாடுகள் ரூ. 18-00

(சந்தாத் தொகையை மணியார்டர் அல்லது சென்னையில் மாற்றக் கூடிய டிமாண்ட் டிராப்ட் மூலம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். சந்தாவைச் செக் மூலம் அனுப்புவதைத் தவிர்க்கவும்.)



உயிர்களிடத்து அன்பு வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்

— பாரதியார்



அட்டைப்படச் சிறுமி: ஆயுதபூஜையாமே? எனக்கு என் கைதான் ஆயுதம் பார்த்தாலே தெரியுதில்லே?

வண்ணப்படம்: ஞானலிங்கம்



பிரில்® இங்க்
உங்கள் எழுத்துக்கு அழகு ஊட்டுகிறது.
PERMANENT ROYAL BLUE
Bril
FOUNTAIN
Bril
INK
தயாரிப்பாளர்:
இண்டஸ்டிரியல் ரிஸர்ச் கார்ப்போரேஷன்
சென்னை-41 & பெங்களூர்-3
ADWAVE-IRC-22TAM



அலகாபாத் பாங்கில்
ஸேவிங்ஸ் பாங்க் கணக்குத்
தொடங்குவது சிறுபிள்ளை
விளையாட்டுப் போன்றது
இன்றே ஒரு ஸேவிங்ஸ் பாங்க் கணக்குத் தொடங்குங்கள்
அலகாபாத் பாங்கிற்கு வந்து எங்களில் யாரிடமாவது கேளுங்கள். ரூ. 5 மட்டும் செலுத்தி, உடனே ஒரு சேமிப்புக் கணக்குத் தொடங்கி விடலாம். அவ்வளவு சுலபம். நீங்கள் ஒழுங்காகச் சேமித்து வரும் சிறு தொகை எவ்வளவு சீக்கிரமாகப் பெருகி வருகிறது என்று ஆச்சரியப்படுவீர்கள். இன்னும் சௌகரியங்கள், சேவைகள்......
அல்ஹாபாத் பாங்க்
ஹெட் ஆபீஸ்: 14, இந்தியா எக்ஸ்சேஞ்ச் பிளேஸ், கல்கத்தா-1
நீங்கள் தாராளமாகப் பழகுவதற்குரிய தென்று உணர்த்துகின்ற பாங்க்

சேரிடம் அறிந்து சேர்

சேரிடம் - தொழிலுக்கோ, நட்புக்கோ சேரும் இடம்.

அறிந்து - எஜமானன், சிநேகிதன், கூட்டாளி முதலியவர்களுடைய குணங்களையும் மற்ற விஷயங்களையும் சரியாய் தெரிந்து கொண்டு.

சேர் - அந்த எஜமானனிடம் சேர், அல்லது நட்புச் செய், அல்லது கூட்டில் சேர்ந்துகொள்.


விஷயம் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் நட்பிலோ, கூட்டிலோ அல்லது சேவகத்திலோ சேர்ந்து விட்டாயானால் பின்னால் துக்கத்துக்கு இடமாகும். இணக்கம் அறிந்து இணங்கு என்ற விடத்தில் இணக்கம் என்பது இருவருக்குள் பொருத்தம். சேரிடம் அறிந்து சேர் என்பதில் சேரிடம் என்றால் நாம் புகும் இடத்தின் நன்மை தீமைகள். நல்ல இடமானாலும் இருவருக்கும் இணக்கம் இல்லாமலிருக்கலாம்.

சையெனத் திரியேல்

இதில் 'திரி'வது என்றால் பொறுப்பு எதுவும் எடுத்துக் கொள்ளாமல் இங்குமங்கும் சுற்றிக் கொண்டு காலம் கழிப்பது. குடும்பம் அல்லது தொழில் அல்லது தருமம் அல்லது தேசம் அல்லது கல்வி அல்லது வேறு ஏதாவது பெரியோர் ஒப்புக் கொள்ளக் கூடிய பொறுப்பு ஒன்று மில்லாமல் உடலுக்கு உணவு முதலியவை பார்த்துக் கொண்டிருப்பது இகழ்ச்சிக்குரியதாகும். 'சை' என்று பெரியோர் சொல்லக் கூடிய இவ்வாழ்வு வேண்டாம்.

சொற் சோர்வு படேல்

பேசும்போது உன் எண்ணத்தைப் பிறர் சரியாக அறியுமாறு தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும். மனத்தில் உள்ள எண்ணங்களுக்குத் தகுந்த சொற்களைச் சரியாக அமைத்துப் பேசினால்தான் பேச்சு பயன்படும். இதைப் பயிற்சி செய்ய வேண்டும். இல்லாவிட்டால் சொற் சோர்வு படும். கல்வி இருந்தாலும் பயன்படாது.





கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்த வாரியார்

கண்ணன் கட்டுண்டல்

அகில உலகங்களையும் ஈன்ற பிரம தேவனைத் தனது நாபிக் கமலத்தில் ஈன்ற கண்ணனாகிய கடவுளைத் தன் மகனாகப் பெற்று வளர்க்கும் யசோதை எண்ணற்ற தவம் செய்தவள்.

ஒரு நாள் தன் இல்லத்தின் பணிகளைக் கோபிகைப் பெண்களைச் செய்யுமாறு கட்டளை யிட்டாள்.

யசோதா தேவியோ கண்ணனுடைய கீதங்களை இனிய நாதங்களுடன் பாடித் தயிர் கடைந்து கொண்டிருந்தாள்.

தாய் தயிர் கடைந்து உடல் தளர்வதைக் கண்ட கண்ணபிரான் மெல்லத் தவழ்ந்து வந்து, பசியால் களைத்தவரைப் போல் தாயின் களங்கமில்லாத முகத்தைப் பார்த்து மோகனப் புன்னகை செய்து, தயிர் கடையும் மத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்.

சந்திர முகத்தில் உள்ள நீலோற்பலம் அனைய கண்களில் கண்ணீர்த் துளிகள் அணிமுத்துக்களைப் போல் சிந்த விம்மி விம்மி அழுதார். கண்ணனுடைய வண்ண முகத்தைக் கண்ட யசோதை தயிர் கடையும் மத்தை விடுத்து, மகனை அன்புடன் எடுத்துப் பவள வாயில் முத்தம் கொடுத்தாள்.

''என் கண்ணே! கண்ணின் கருமணியே! உயிருக்கு இனிய உத்தம ரத்தினமே! மாணிக்க மணியே! வருக! வருக'' என்று அன்பின் மிகுதியால், கொஞ்சிப் பால் ஊட்டினாள்.

அப்போது அடுப்பில் பால் காய்ந்து கொண்டிருந்தது. 'யசோதையின் இரு முலைப் பால் கண்ணனுக்கு உணவாகின்றதே? அந்தப் புண்ணியம் செய்யாத யான் இருந்து பயன்?' என்று கருதி, வெம்பித் தீயில் வீழ்ந்து இறந்து போவதே நல்லது என்று எண்ணுமாப் போல் பால் பொங்கித் தீயில் வீழ்ந்தது.

இதனைக் கண்ட யசோதைப் பிராட்டி மெல்லக் கண்ணனைத் தரையில் விடுத்துச் சமையல் அறைக்குள் சென்று பாலைக் கவனிக்கலானாள்.

பகவான் கிருஷ்ணர் மெல்லத் தளர் நடை யிட்டுச் சென்று—தாமரைக் கரங்களால் மத்தை எடுத்து எறிந்தார். முத்தனைய பற்களால் கயிற்றைக் கடித்தார். அங்கிருந்த குழவிக் கல்லால் தயிர்ப் பானையை உடைத்தார். தயிரையும், தயிரின் ஏட்டையும் உண்டார்.

தனியே உள்ள ஓர் அறைக்குச் சென்றார். அங்கே உரியில் உள்ள வெண்ணெய்க் கலசங்களைக் கண்டார். உரி எட்டாமையால் உரலை உருட்டிக் கொண்டு வந்து நேரே கிடத்தி, அதன் மீது ஏறிக் கலயத்தில் இருந்த வெண்ணெயை உண்டார். மிகுதி வெண்ணெயைக் குரங்குகளுக்கு இட்டார். இவ்வாறு பலப் பல திருவிளையாடல்களைப் புரிந்து கொண்டிருந்தார்.

யசோதை பாலைக் காய்ச்சி இறக்கி விட்டுத் தயிர் கடையும் இடத்தை அடைந்தாள். தயிர்ப் பானை உடைந்து தயிர் கீழே சிந்தியிருக்கக் கண்டாள். கண்ணனை அங்கும் இங்கும் தேடினாள். தனி அறைக்குள் சென்றாள். அங்கு தன் மைந்தனின் திருவிளையாடலைக் கண்டாள்.

மகனைத் தண்டிக்க வேண்டும் என்று எண்ணி ஒரு சிறு கோலை எடுத்து மெல்லப் பின்புறமாகச் சென்றாள். கண்ணன் திரும்பிப் பார்த்துக் கோலுடன் வரும் அன்னையைக் கண்டதும் உரலை

விட்டு இறங்கி, வெண்ணெயும் கையுமாக, பாதச் சதங்கை ஒலிக்க ஓடினார்.

வேதங்களும் காணாத பாதங்கள் நோவ ஓடுகின்ற கண்ணனை அடிக்கத் தாய் கோல் ஏந்திய கையுடன் தொடர்ந்து ஓடினாள். அவள் கையில் உள்ள வளையல்கள் ஒலித்தன.

''பிரமாதி தேவர்களும் காணாத பரம்பொருள் இவன் என்று அறியாது இவனை அடிக்க முயலுகின்றாயே?'' என்று சிரிப்பது போல் இருந்தது வளையல்களின் ஓசை.

அவ்வாறு ஓடுகின்ற யசோதையின் கூந்தலில் சூடியிருந்த மலர்கள் சிந்தின. 'எம்பெருமானைக் குழந்தையாகப் பெற்ற இப் புண்ணியவதியின் சென்னியில் இருக்க நாம் தகுதி உடையோமல்லேம். இவள் பாதத்தில் இருக்கும் பாக்கியம் பெற வேண்டும்' என்று எண்ணி மலர்கள் அவள் பாதத்தில் விழுவது போல் இருந்தன.

சிறிது நேரம் தாயை அங்கும் இங்கும் அலைக்கழித்த பின் கருணையினால் தாய் கையில் கண்ணன் அகப்பட்டார்.

யசோதை கண்ணனுடைய கரமலர்களைப் பற்றிக் கோலை அசைத்து ''நீ செய்கின்ற சேட்டைகளுக்கு அளவே கிடையாதா? கள்ளப்பயலே! உன்னைக் கட்டிப் போடுகிறேன்'' என்று அதட்டினாள். பயந்து நடுங்குபவரைப் போல் கண்ணன் அஞ்சனம் தீட்டிய கண்களினின்றும் நீர் வழிய அழுது, எட்டுத் திசைகளையும் பிரண்டு பிரண்டு பார்த்து விம்மினார்.

(தொடரும்)



தேச தேசக் கதை — ஆப்பிரிக்கா

தாயின் துணிவு



ஆப்பிரிக்காவின் தென் பகுதியில் ஒரு பெண் வசித்து வந்தாள். அவளுக்குப் பல குழந்தைகள். ஆப்பிரிக்காக் கண்டம் அடர்ந்த காடுகளுக்கும் பயங்கரமான மிருகங்களுக்கும் பெயர்போன தாயிற்றே! காடுகளைப் போலவே ஆப்பிரிக்காவில் பாலைவனமும் உண்டு. நெடிதுயர்ந்த மலைகளும் சீறிப் பாயும் ஆறுகளுக்கும் குறைவில்லை, அங்கே. நிற்க, பெண்ணின் கதைக்கு வருவோம்.

அந்தப் பெண் தன் குழந்தைகளுக்கு உணவு சேமித்து வர வெளியே போக வேண்டி இருக்கும்போதெல்லாம் தன் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளும்படி ஒரு முயலிடம் கூறிப் போவாள். முயல் அவளுடைய தோழன். முயலும் அவளுடைய குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளும். அந்தப் பெண் தங்கியிருந்தது ஒரு நீர் நிலையின் அருகில். ஆகவே, தண்ணீர் குடிக்க அங்கு பல மிருகங்கள் வரும். முயலுக்கு எல்லா மிருகங்களும் பழக்கமானதினால் அதற்கு எதனிடமும் பயம் கிடையாது.

இப்படி ஒரு நாள் அந்தப் பெண்ணினுடைய குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது ஒரு பயங்கரமான சத்தம் கேட்டது. இதுவரையில் பார்த்திராத ஒரு ராட்சத மிருகம் வந்து கொண்டிருந்தது. அப்பா! எத்தனை பெரிய உருவம்! என்ன பயங்கரம்! உடலெல்லாம் ரோமம், குரங்கா? காளையா? எது என்றே தெரியவில்லை. குரங்கு முகம், ஆனால் அதற்குக் கொம்

வாண்டு மாமா



புகள் இருந்தன. எப்படி இருந்தால் என்ன? முயலுக்கு நடுக்கம் ஏற்பட்டது. அந்தப் பயங்கர மிருகத்திடமிருந்து தப்பிப் பிழைத்தால் போதும் என்று எடுத்தது ஓட்டம்.

ஆனாலும் அது வெகு தூரம் ஓடிவிடவில்லை. கொஞ்ச தூரம் ஓடி ஒரு மறைவிடத்தில் பதுங்கிக் கொண்டு பார்த்தது. அந்தப் பெண்ணுடைய குழந்தைகளின் கதி என்ன ஆகுமோ என்ற கவலை அதற்கு. ஒரு பெரிய மலையே நகர்ந்து வருவது போன்ற அந்தப் பயங்கர மிருகத்தின் முன்னால் பாவம், சின்ன முயல் எப்படி எதிர்த்து நின்று அந்தக் குழந்தைகளைக் காப்பாற்ற முடியும்?

கர்ஜித்தது காட்டு மிருகம். ''யாருடைய குழந்தைகள் இவை?''

''இந்த இடத்தில் வாழும் ஒரு பெண்ணினுடைய குழந்தைகள்'' என்றது முயல், பதுங்கிய இடத்திலிருந்து.

''அப்படியா? எனக்கு ரொம்பப் பசி. நான் இவர்களைச் சாப்பிடப் போகிறேன்'' என்று கூறியபடியே குழந்தைகளை அப்படியே விழுங்கிவிட்டது அந்தக் கோர மிருகம். பாவம், முயல் நடந்ததைப் பார்த்து விக்கித்துப் போயிற்று. அதற்குத் துக்கமும் அழுகையுமாக வந்தது. ஆனால் என்ன செய்வது?

சிறிது நேரத்துக்கெல்லாம் உணவுடன் அந்தப் பெண் வந்தாள். தன் குழந்தைகளைக் காணாது திடுக்கிட்டாள். முயல் நடந்ததைக் கூறியது. சொல்லும் போதே அதன் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. அதனால் பேசவே முடியவில்லை. துக்கம் மூக்கை அடைத்துக் கொண்டது. கண்ணீர் மீசையை நனைத்தது. முயலின் உண்மையான அன்பைக் கண்ட அந்தப் பெண் அதைக் குறை கூறவில்லை. ''அழாதே.... நீ என்ன செய்வாய், பாவம். நீ ஓடாதிருந்தால் அந்த மிருகம் உன்னையும் விழுங்கியிருக்கும்'' என்று சமாதானப் படுத்தினாள். பிறகு ஒரு கட்டுச் சுள்ளியையும் சிக்கி முக்கிக் கற்களையும் எடுத்துக் கொண்டாள். தன்னுடைய கத்தியைத் தீட்டிக் கூராக்கிக் கொண்டாள். அந்த மிருகத்தைத் தேடிக் கிளம்பினாள் அந்தப் பெண்.

அந்தப் பிராந்தியத்துக்கே அந்த மிருகம்தான் தலைவன். ஆகவே, அது ஒரு சிறு குன்றின் மீது அமர்ந்தபடி தன் பிரதேசத்தில் வாழும் ஜீவன்களின் குறைகளைக் கேட்டுக் கொண்டிருந்தது. பெண் அங்கு போனாள். ''தலைவனாகிய மிருகமே! நான் என் குழந்தைகளைத் தேடி வந்திருக்கிறேன். அவர்கள் எங்கே?'' என்று கேட்டாள் பெண்.


''இப்படி அருகே வா. நீ கூறுவது என் காதில் சரியாக விழவில்லை'' என்றது மிருகம். பெண் அதன் அருகே போனதும், அந்தக் கொடிய மிருகம் அவளையும் அவள் கையில் இருந்த சுள்ளிகள், சிக்கிமுக்கிக் கற்கள், கத்தி எல்லாவற்றுடனும் ஒரே விழுங்காக விழுங்கி ஏப்பம் விட்டது.

''உன் குழந்தைகளையா தேடி வந்தாய்? அவர்கள் உள்ளே இருக்கிறார்கள். போ'' என்று கூறி நாக்கினால் உதட்டைத் தடவிச் சப்புக் கொட்டிக் கொண்டது, அந்தப் பொல்லாத மிருகம். ஆனால் அந்தப் பெண் அந்த மிருகத்தைவிடப் பொல்லாதவள்!

அந்த மிருகத்தின் வயிற்றுக்குள் அவள் தன் குழந்தைகள் சுகமாக இருப்பதைக் கண்டாள். அது மட்டுமா? இன்னும் பலவும் பலரும் அதன் வயிற்றினுள் இருப்பதைப் பார்த்தாள். மனிதர்கள், ஆடு மாடு, நாய்கள். அவளுடைய குழந்தைகள், ''அம்மா, பசிக்கிறது'' என்று அழுதன. உடனே அந்தப் பெண் தன் கையோடு கொண்டு போயிருந்த சுள்ளிகளைக் கீழே போட்டாள். சிக்கி முக்கிக் கற்களைத் தட்டிப் பொறி உண்டாக்கிச் சுள்ளிகளில் தீ மூட்டினாள். இத்தனையும் அந்த மிருகத்தின் வயிற்றுக்குள்ளேயேதான். பிறகு அந்த மிருகத்தின் உடலின் பக்கவாட்டிலிருந்து சுவையான சதைகளையும் விலா எலும்பையும் கத்தியின் உதவியால் வெட்டித் தீயில் போட்டு வாட்டிப் பக்குவப் படுத்தித் தன் குழந்தைகளின் பசிக்குக் கொடுத்தாள்.

''எங்களுக்கும் பசியாக இருக்கிறது, அம்மா. ஏதாவது சாப்பிடக் கொடு'' என்று கேட்டார்கள் உள்ளிருந்தோர். ஆகவே, அவர்களுக்குமாக இன்னும் அதிகமான மாமிசத்தை அந்த மிருகத்தின் உட்புறத்திலிருந்து வெட்டி, வாட்டிக் கொடுத்தாள்.

மிருகத்தின் வயிற்றினுள் இத்தனை ரகளையும் நடக்கும்போது அது சும்மா இருக்குமா? அது வலியினால் துடித்தது. ''யாரங்கே? எங்கே, நமது அவை மருத்துவர். கூப்பிடு. என் வயிற்றினுள்ளே ஒரே எரிச்சல், வலி'' என்று கூறிப் புரண்





டது மிருகம். உள்ளே பூகம்பம். உள்ளிருப்போரும் உருண்டு புரண்டனர். வைத்தியக் குரங்கார் வந்தார். நாடி பிடித்துப் பார்த்தார். ஒன்றும் விளங்கவில்லை. ''நதிப் படுகையில் புரண்டு உடலில் சேற்றைப் பூசிக் கொண்டு பாருங்கள். எரிச்சல் குறையலாம்'' என்று யோசனை கூறினார். அதன் படியே அந்தக் கோர மிருகம் சேற்றிலே உருண்டது, புரண்டது. ஆனால் அதன் வலி குறையவில்லை. எப்படிக் குறையும்? உள்ளேதான் அந்தப் பெண் மேலும் மேலும் சுள்ளிகளைப் போட்டுக் கிண்டிக் கிளறி எரியவிட்டுக் கொண்டிருந்தாளே! கடைசியில் மிருகம் உயிர் துறந்தது!

அந்த மிருக ராஜாவின் அவைத் தலைவர்களான மற்ற மிருகங்கள் தங்கள் அரசன் படும் அவஸ்தையை எட்ட நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தன. ஆட்டம் அடங்கி அரசன் சலனமற்றுப் போனதும் குரங்காரை அந்த மிருகத்தின் அருகே போய் நிலைமையை அறிந்து வருமாறு கேட்டுக் கொண்டன. குரங்கும் செத்துக் கிடக்கும் மிருகத்தின் அருகே போய்ப் பார்த்துவிட்டுப் பதைபதைக்க ஓடி வந்தது. ''மலையடிவாரத்தில் வசிப்பவர்கள் அதன் உச்சியில் ஏறி விடுங்கள். சமவெளியில் இருப்போர் இனி ஓட முடியாது என்ற நிலை ஏற்படும் வரை ஓடுங்கள். என்னைப் பொறுத்தவரையில் நான் மரத்துக்கு மரம் தாவி இக்கானகத்தின் கோடிக்குப் போய்த் தப்பித்துக் கொள்ளுகிறேன்'' என்று கூறியபடியே ஒரு பெரிய மரத்தை நோக்கித் தாவலாயிற்று. இறந்து கிடந்த நிலையிலும் அந்த மிருகம் அவைகளுக்கு அத்தனை பீதியை உண்டாக்கியது.

கொஞ்ச நேரத்தில் எல்லா மிருகங்களும் இறந்து கிடந்த அந்த மிருகத்திடமிருந்து பல மைல் தூரத்துக்கு ஓடிப் போய் விட்டன. அதன் உள்ளே இருந்த பெண் அம்மிருகத்தின் வயிற்றில் தன் கத்தியினால் ஒரு துவாரம் செய்தாள். அதன் வழியாகத் தன் குழந்தைகளோடு வெளியே வந்தாள். அவளைத் தொடர்ந்து மற்ற மனிதர்களும், மாடுகளும், நாயும் வெளியேறின.

''பூ..... பூ....! நான் வெளியேற உதவியது யார்?'' என்றது எருது.

''ளொள்.... ளொள்...! எனக்கு உதவியது யார்?'' என்று கேட்டது நாய்.

''ஓ...ஓ...! இந்த உதவியைச் செய்தது யார்?'' என்றான் மனிதன்.


''இந்தப் பெண் — எங்கள் தாயார் — தான் நாம் எல்லாம் இந்த உலகத்துக்குள் வர உதவினவள்'' என்றன குழந்தைகள். ''அப்படியானால் நான் அந்தப் பெண்ணை மணந்து கொள்ளுகிறேன்'' என்றான் மனிதன்.

''இனி அவளே நம் தலைவி'' என்றனர் மற்றவர்கள்.

'' நாங்கள் அவளுக்காக நிலத்தை உழுவோம். பாலைக் கொடுப்போம்'' என்றன எருதும் பசுவும்.

''நானும் என் தோழர்களும் இவளுக்காக வேட்டையாடுவோம். அவள் குகையைக் காவல் காப்போம்'' என்றது நாய்.

அதன்படியே அவர்கள் அந்தப் பெண்ணுக்குத் தங்கள் நன்றியைச் செலுத்தினார்கள். விரைவிலேயே அந்தப் பெண்ணின் குழந்தைகளும் அவர்களுடைய குழந்தைகளும் பேரக் குழந்தைகளும் அவர்களின் பேரக் குழந்தைகளும் பாண்டு தேசத்தின் வலிமை மிக்க பிரஜைகளாக வாழ்ந்து வரலானார்கள்.





இலட்சியப் பள்ளிக்கூடம்

இந்தப் பக்கத்தில் மேலே உள்ளது ஒரு பள்ளிக்கூடம். கீழே உள்ள படம் ஒரு வகுப்பறை. இது மேற்கு இங்கிலாந்திலுள்ள செல்டன்ஹாம் என்ற ஊரில் அமைக்கப்பட்டிருக்கிறது. குழந்தைகள் தங்கள் வீட்டிலிருப்பதே போன்ற எண்ணத்தை உண்டாக்கும் வகையில் இப்பள்ளியை அமைத்திருக்கிறார்கள். படிப்பு மட்டுமல்லாமல் குழந்தைகளின் ஆரோக்கியத்தையும் கருத்தில் கொண்டு கட்டப் பட்ட மாதிரிப் பள்ளி இது. குளிர் காலத்தில் கதகதப்பாகவும், வெயில் காலத்தில் குளுகுளுவென்றும் இருக்குமாறு வெப்பநிலை சீர்ப்படுத்தப்பட்டுள்ளது இங்கு. உயர்ந்த ஜன்னல்கள், தாழ்ந்த மேஜைகள், ஆடும் குஞ்சு நாற்காலிகள், விளையாட்டுப் பொருள்கள், விரும்பிப் படிக்கும் புத்தகங்கள், கைவேலைச் சாதனங்கள் — இப்படி இந்தப் பள்ளி வழிவழியாக வந்துள்ள வகுப்பறையைப் போலில்லாமல் புதிய முறையில் இருக்கும். முதல் நாள் எந்தக் குழந்தை எந்தப் பொருளை எப்படி விட்டுச் சென்றதோ, அது அங்கேயே அப்படியே இருக்கும். நல்ல காற்றோட்டம், அமைதியான சூழல், எந்தக் காரியத்தையும் தாங்களே செய்து பார்த்து அறிந்து கொள்ளும் சுதந்திரம்; புத்தகப் படிப்பு மட்டுமல்லாமல் செயல் திறனுக்கும் வழிவகை உண்டு இங்கு. இந்த மாதிரிப் பள்ளிக்கூடங்கள் நம் நாட்டில் எப்போது....? சற்றுப் பொறுங்கள். இங்கிலாந்திலேயே இம்மாதிரிப் பள்ளிகள் இன்னும் வரவில்லை. ஆராய்ச்சிக்காக மாதிரிக்கு ஒன்று அமைத்திருக்கிறார்கள்; அவ்வளவுதான்!

படமும் தகவலும்: பிரிட்டிஷ் இன்பர்மேஷன்







செஸ் ஆட்டம்

A. சங்கரன்

யாராவது இரண்டு பேர் சதுரங்கம் ஆடும்போது நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? இருவரும் தம்மை மறந்த நிலையில் சதுரங்கப் பலகையிலேயே தங்கள் கண்ணும் கருத்தும் ஈடுபட்டவாறு இருப்பதை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா? அழகழகான சதுரங்கக் காய்களை நீங்கள் தொட்டுப் பார்த்ததுண்டா? உங்களுக்கு செஸ் ஆடத் தெரிந்தால், நீங்கள் அதிர்ஷ்டசாலிகள். ஆமாம், செஸ் பொழுது போக்கு ஆட்டமன்று. அது அறிவுக்கு வேலை கொடுக்கும் ஓர் ஆட்டம். சதுரங்கம் ஆடுபவர்களின் அறிவு, ஞாபக சக்தி, பொறுமை முதலியன வளர்ச்சி பெறுகின்றன.

சதுரங்கம் நமது நாட்டில்தான் பிறந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இந்த ஆட்டம் (சதுரங்கம்) நமது நாட்டில் அவ்வளவு அதிகமாக ஆடப்படுவதில்லை. அந்தக் காலத்தில் மகாபாரதமே இந்த விளையாட்டினால்தான் விறுவிறுப்படைந்தது. அதில் 'சூதாட்டம்' என்று இதை இழிவாகக் கூறப்பட்டிருந்தாலும் அதை ஆடுவதற்குத் திறமை வேண்டும். அத்தகைய திறமைசாலியாக இருந்தான் சகுனி. அதனால்தான் பாண்டவர்களை அவனால் வெல்ல முடிந்தது. பகடைக் காய்களை உருட்டி ஆடும் விளையாட்டுத்தான் பாரதப் போருக்கே காரணமாயிற்று. அந்த ஆட்டத்துக்கும் இன்றைய 'செஸ்' ஆட்டத்துக்கும் நிறைய ஒற்றுமை உண்டு. பின்னால் இந்திய மன்னர்கள் ஆடிய சதுரங்கம் இன்றைய செஸ்ஸைப் போலவேதான். மொகலாயர்கள் சதுரங்கமாகிய இந்த செஸ் ஆட்டத்தை மிகுந்த ரசனையோடும் கலை உணர்வோடும் ஆடி மகிழ்ந்திருக்கிறார்கள். விசாலமான பளிங்குக் கல் தளவரிசையிட்ட கூடத்தில் சதுரங்க அமைப்பு எழுதப்பட்டிருக்கும். காய்களாக உயிருள்ள ஆண்களையும் அழகிகளையும் நிற்க வைத்து அந்த ஆட்டத்துக்கே உயிரூட்டி இருக்கிறார்கள். இப்படியெல்லாம் நம் பாரதத்தில் இந்த செஸ்—சதுரங்கம்—அப்போது ஆடப்பட்டு வந்தாலும் சமீப காலமாக இது கவனிப்பாரற்றுப் போய்விட்டது. வர வர இது ஒரு மறைந்த கலையாகவே ஆகிவிட்டது.

இன்று இது பெரிய நகரங்களில் மட்டுமே ஆடப்படுகிறது. உங்கள் ஊர் நடுத்தர ஊராக இருந்தால், உங்கள் பள்ளியில்கூட செஸ் பலகை இருப்பது சந்தேகம்தான். செஸ் இளமையில் கற்றுக் கொள்ள வேண்டிய ஓர் ஆட்டம். நமது ஊர்களிலும் பள்ளிகளிலும் செஸ் ஆடப்பட வேண்டும். போட்டிகள் நடத்தப்பட வேண்டும்.

இன்று உலகில் ருஷ்யர்கள்தான் இதை மிகவும் விரும்பி ஆடுகிறார்கள். உலக செஸ் மேதைக்கான போட்டியில் சமீபத்தில் ரஷியரான ஸ்பாஸ்கியும் அமெரிக்கரான பாபி ஃபிஷரும் மோதிக் கொண்டதை உலகம் முழுவதும் எப்படிப் பரபரப்போடு கவனித்தது என்று உங்களுக்குத் தெரியும். முடிவில் பாபி ஃபிஷர் ரஷ்யர்களிடமிருந்து பறிக்க முடியாத உலக செஸ் மேதை விருதைப் பறித்துக் கொண்டதையும் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள்.

ஆங்கிலத்தில் 'செஸ்' பற்றி நிறைய புத்தகங்கள் வெளியாகியுள்ளன. முழுக்க முழுக்க செஸ் பற்றிய தகவல்களை வெளியிடும் மாதாந்திர,

மேலே: ஸ்பாஸ்கியும் பாபி ஃபிஷரும்

வாராந்திர இதழ்கள் வெளிநாடுகளில் உள்ளன. நம் நாட்டிலும் ஆங்கில செய்தித் தாள்கள் தங்கள் ஞாயிறு இதழ்களில் 'செஸ்' பற்றிக் கட்டுரைகள் வெளியிடுகின்றன. ஆனால் 'செஸ்' பற்றித் தமிழ்ப் புத்தகம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

செஸ் கடினமான ஓர் ஆட்டம். அதைப் பிரயாசையுடனும், அக்கறையுடனும் பயில வேண்டும். ஆடுவதற்கு நிறையப் பொறுமை வேண்டும்.

செஸ் பலகையில் கறுப்பும் வெளுப்புமாக அறுபத்து நான்கு கட்டங்கள் உள்ளன. கறுப்புக் கட்டங்கள் முப்பத்திரண்டு, வெள்ளைக் கட்டங்கள் முப்பத்திரண்டு. காய்கள் கட்டம் கட்டமாக, பல்வேறு விதங்களாக நகர்கின்றன. செஸ் ஆடத் தொடங்குமுன்னர், கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய விதி, செஸ் பலகையில் வலது கைக் கீழ்க் கோடியில் வெள்ளைக் கட்டம் இருக்குமாறு வைக்கப்பட வேண்டும் என்பது தான். இது மிக முக்கியமான ஒரு விதி. ஓவியர்கள் படங்களிலே தவருக வரைந்தும், புகைப்படக்காரர்கள்ஆடத் தெரியாத பிரமுகர்கள் முன்னிலேயில் பலகையைத் தவருக வைத்துப் படம் எடுத்தும், நகைப்பு ஏற்படுத்தியதுண்டு.

சதுரங்கக் காய்கள், வெள்ளை மற்றும் கறுப்பு நிறத்தில் உள்ளன. நிறத்துக்குப் பதினறு. வெள்ளைக் காய்தான் முதலில் நகர்த்தப்பட வேண்டும் என்பதும் ஒரு விதி. கடைசி இரண்டு கட்டங்களிலும் காய்கள் எதிரெதிராக வைக்கப் படுகின்றன. செஸ்ஸில் என்னென்ன காய்கள் உள்ளன ? செஸ்ஸில் பொதுவாக உபயோகப்படுத்தப்படும் பெயரையே நாமும் உபயோகிப்போம்.

1. கிங் (ராஜா)—தலையில் சிலுவைக் குறியுடன் பெரியதாக உள்ள காய் இது. ஆட்டத்தில் மிக முக்கியமானது. நிறத்துக்கு ஒன்று.

2. க்வீன் (ராணி) — இதை மினிஸ்டர் அல்லது மந்திரி என்றும் சொல்வார்கள். ராஜாவைவிடச் சற்று சிறியதாக இருக்கும். நிறத்துக்கு ஒன்று.

3. ரூக் (Rook)—நிறத்துக்கு இரண்டு, மொத்தம் நான்கு. ரூக் என்றல் கோட்டை என்று அர்த்தம். இதை 'யானை' என்பார்கள், நம்மவர்கள்.


4. நைட் (Knight) — இதுவும் நிறத்துக்கு இரண்டு. குதிரை வடிவம் கொண்டது.

5. பிஷப் (Bishop) — இதுவும் நிறத்துக்கு இரண்டு. இதை ஒட்டகம் என்றும் அழைப்பதுண்டு.

6. பான் (Pawn) — நிறத்துக்கு எட்டு விதம் மொத்தம் பதினறு பான்கள் உள்ளன. இவற்றைச் சிப்பாய்கள் எனவும் அழைப்பதுண்டு.


செஸ் ஆட்டத்தை இருவர்தான் ஆட முடியும். எப்போது ஆட்டம் முடிகிறது? ஏதாவது ஒரு ராஜா கட்டப்படும்போது ஆட்டம் முடிகிறது. கட்டப்படும் ராஜா யாருடையதோ, அவர் தோல்வி அடைந்தவர். செஸ்ஸில் ராஜா வெட்டப்படுவதில்லே. மற்றப் படைகளின் உதவி கொண்டு, எதிரியின் ராஜா நகர முடியாமல் செய்வதே, 'செக்மேட்'. (Checkmate) தாயக் கட்டம் ஆட்டத்தைப் போலவே, ஒரு கட்டத்துக்குள் இருக்கும் காய், அந்தக் கட்டத்துக்குள் வரும் எதிரியின் காயால் வெட்டப்படுகிறது. செஸ்ஸில் எந்தக் காயும் எதையும் வெட்டலாம், கிங்கைத் தவிர. பான்கூட, க்வீனே வெட்டும்! தாயக் கட்டம், பரம பதம் முதலிய ஆட்டங்களில், ஒரு முடிவை நோக்கி விரைவது தான் நோக்கம். ஆனல் செஸ்ஸில் எதிரி ராஜாவைத் தன் படைகளால் சூழ்ந்து கொண்டு, அவர் நகர முடியாமல் கட்டுவதுதான் நோக்கம். மற்றக் காய்களை வெட்டுவது செஸ் ஆட்டக்காரரின் நோக்கமாக இருக்கக் கூடாது. அதிக சக்தி வாய்ந்த க்வீனேயும் இழந்தபிறகுகூட எதிரி ராஜாவைக் கட்ட முடியும்.

செஸ் காய்கள் பலவும் பல முறைகளில் நகர்கின்றன. கிங் ஒரே ஒரு கட்டம்தான் நகரும். யாராவது செஸ் ஆடிக் கொண்டிருக்கும்போது நீங்கள் உன்னிப்பாகக் கவனியுங்கள். உங்கள் வீட்டில் யாருக்காவது செஸ் ஆடத் தெரிந்தால், முதலில் அந்த ஆட்டத்தைக் கற்றுக் கொள்ளுங்கள்.



தந்தையைத் தேடி

ரஜன்



அந்த ஊருக்குப் பெயர் காட்டூர். அங்கு ஒரு கோயில் உண்டு. அந்தக் கோயிலில் ஒரு யானையும், அந்த யானைக்கு ஒரு குட்டியும் உண்டு.

தினமும் அந்த யானையும் குட்டியும் அந்த ஊருக்கு அருகே ஓடும் ஆற்றுக்குச் சென்று குளிப்பது வழக்கம்.

வழக்கம்போல் ஒரு நாள் இருவரும் ஆற்றில் குளித்துக் கொண்டிருக்கும் போது திடீரென்று குட்டி யானை தன் அம்மாவிடம் கேட்டது:

''அம்மா, அம்மா! என் அப்பா யார், எங்கே இருக்கிறார்?''

குட்டி யானையின் கேள்வி பெரிய யானைக்குச் சற்று அதிர்ச்சியாகத்தான் இருந்தது. இருப்பினும் அதைக் காட்டிக் கொள்ளாமல் அந்த ஆற்றை ஒட்டி அமைந்துள்ள காட்டைச் சுட்டிக்காட்டி, ''மகனே! உன் அப்பா அந்தக் காட்டினுள்தான் இருக்கிறார்'' என்றது.

குட்டியின் உள்ளத்தில் ஒரு குறுகுறுப்பு. 'அப்பா! இந்தக் காட்டில் இருப்பதென்றால் நாம் ஏன் அங்கு சென்று அவரைப் பார்த்து வரக் கூடாது?'

தாய் யானை கவனியாதபோது குட்டி யானை காட்டுக்குள் ஓடி விட்டது.

குட்டி யானை காட்டுக்குள் போகப் போக மரஞ்செடி கொடிகள் அடர்த்தியாக இருந்தன. பறவைகளும், மிருகங்களும் பல வித ஒலிகளை எழுப்பிக் கொண்டிருந்தன. குட்டி யானைக்குப் பயம் எடுக்க ஆரம்பித்தது. 'திரும்பி விடலாமா?' என்று ஓர் எண்ணம். 'திரும்பினால் அப்பாவைப் பார்க்க முடியாதே' என்ற ஓர் ஏக்கம்.

அப்போது 'உ...ர்...ர்' என்ற ஏதோ பயங்கர கர்ஜனை.

சட்டென்று அருகிலிருந்த ஒரு பெரிய புதருக்குப் பின்னால் போய்ப் பதுங்கிக் கொண்டது குட்டி யானை. அதற்கு உடலெல்லாம் நடுங்கியது.

அந்த உறுமல் ஒலி மிக அருகிலிருந்து வந்தது. குட்டி யானை மெதுவாக எட்டிப் பார்த்தது.

அங்கே கண்ட காட்சி?... அப்பப்பா, என்ன கோரம்!

ஒரு சிங்கம் ஒரு வரிக் குதிரையை அடித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தது.

குட்டி யானையின் உடல் சிலிர்த்தது.

சிறிது நேரத்தில் தனக்குத் தேவையானதைச் சாப்பிட்டுவிட்டு மீதியை அங்கேயே போட்டுவிட்டுச் சிங்கம் போய் விட்டது.

'அப்பாடா, நல்ல வேளை! நம்மை அந்த மிருகம் பார்க்கவில்லை. தப்பித்தேன்!' என்று எண்ணிய குட்டி யானை அங்கிருந்து கிளம்ப முயன்றது.

அப்போது 'சரசர' வென்று சத்தம் கேட்டு, யானைக்குட்டி எட்டிப்பார்த்தது.

ஒரு பெரிய குரங்கு வேகமாக வந்தது. சிங்கம் சாப்பிட்டு மீதம் வைத்திருந்த மாமிசத்தின் அருகே வந்து அதை முகர்ந்து பார்த்தது. பின் அங்கிருந்து ஓடிவிட்டது.

குரங்கு போனவுடன் ஓநாய் ஒன்று நாக்கைத் தொங்கவிட்டபடி மாமிசம் இருக்கும் இடத்துக்கு ஓடி வந்தது. மாமிசத்தைப் பற்களால் கடித்து இழுத்து வேண்டிய அளவு சாப்பிட்டு விட்டுப் போயிற்று.

யானைக் குட்டி பார்த்தது. இனி மேலும் இங்கு இருக்கக் கூடாது என்று தீர்மானித்து மறைவிடத்திலிருந்து வெளி வந்தது. வந்ததோ இல்லையோ எதிரே தெரிந்த பெரிய உருவத்தைப் பார்த்து அப்படியே அசந்து விட்டது.

அது என்ன உருவம்? அதன் முன்னால் ஒரு பெரிய காட்டு யானை நின்றுகொண்டிருந்தது. அந்தப் பெரிய யானை குட்டி யானையைத் தன் துதிக்கையால் அப்படியே அலாக்காகத் தூக்கியபடி கேட்டது:

''ஏய், நீ யார்?''

அப்பப்பா என்ன அதிகாரக் குரல் அதற்கு?

காட்டு யானையின் கம்பீரமான உருவத்திலும் குரலிலும் லயித்திருந்த குட்டி யானை தயங்கித் தயங்கிக் கூறியது.

''என் அப்பாவைத் தேடிக் கிராமத்திலிருந்து இங்கு வந்தேன்'' என்று பதில் கூறியது.

''அப்பாவைத் தேடியா!'' ஆச்சரியத்துடன் கேட்ட காட்டு யானை, ''உன் அப்பாவை உனக்குத் தெரியுமா? பார்த்திருக்கிறாயா?'' என்றது.

''ஊஹூம். எனக்குத் தெரியாது.'' பரிதாபமாகக் கூறியது குட்டி யானை.

''பிறகு எப்படிக் கண்டுபிடிப்பாய்?''

'எப்படிக் கண்டுபிடிப்பது? அடையாளம் தெரியாதே.' குட்டி யானைக்கு ஒரே குழப்பம். சிறிது யோசித்தது. 'இவ்வளவு கஷ்டப்பட்டு வந்து அப்பாவைப் பார்க்க முடியாது போல் இருக்கிறதே.'

'இனி இங்கிருந்து என்ன பயன், அம்மாவிடம் போகலாம்' என்று எண்ணித் தன் முடிவைக் காட்டு யானையிடம் கூறியது.

''அதெல்லாம் கூடாது. தனியாகப் போனால் ஆபத்து. பேசாமல் என் பின்னால் வா!'' என்று கட்டளையிட்டு விட்டுக் காட்டு யானை நடக்க ஆரம்பித்தது.

மந்திரத்தால் கட்டுண்டது போல் குட்டி யானை அதன் பின்னே நடந்தது.

வெகு தூரம் நடந்த அவர்கள் கடைசியில் காட்டின் நடுவே இருந்த ஒரு பெரிய குளத்தின் கரைக்கு வந்து சேர்ந்தார்கள்.

குளத்தில் ஓர் அற்புதக் காட்சி. எண்ணற்ற யானைகள் அங்கே குளித்துக் கொண்டிருந்தன. குட்டி யானைக்கு





ஒரே மகிழ்ச்சி. அப்பா, அம்மா எல்லாரையும் மறந்தது. 'குடுகுடு'வென்று ஓடிக் குளத்தில் குதித்து ஆட்டம் போட ஆரம்பித்தது.

எவ்வளவு நேரம் விளையாடியதோ, அதற்குத் தெரியாது. பசி எடுக்க ஆரம்பித்தது. குளிப்பதை நிறுத்தி விட்டுக் கரைக்கு வந்து பெரிய யானையிடம் ''பசிக்கிறது'' என்றது.

அவ்வளவுதான்; பெரிய யானை ஒரு சத்தம் போட்டது. குளத்திலிருந்த யானைகள் கரைக்கு வந்து வரிசையாக நின்றன. குட்டி யானையும் சென்று வரிசையில் நின்று கொண்டது. பெரிய யானை வழி காட்ட வரிசை நகர்ந்தது.

சிறிது நேரத்தில் அந்த யானைக் கூட்டம் ஒரு மலை அடிவாரத்துக்கு வந்து சேர்ந்தது. சிறிது தூரத்தில் மலைச் சரிவில் ஒரு வாழைத் தோட்டம் தென்பட்டது. செழித்து வளர்ந்த வாழை மரங்களில் வாழைப் பழங்கள் பழுத்துத் தொங்கின. வாழைப் பழங்களைப் பார்த்த குட்டி யானைக்கு நாக்கில் நீர் சுரந்தது. பெரிய யானை ஒரு பிளிறல் பிளிறியது. கேட்க வேண்டுமா? யானைக் கூட்டம் வாழைத் தோட்டத்தினுள் புகுந்து பழங்களைத் தங்கள் விருப்பம் போல் உண்ண ஆரம்பித்தன.

குட்டியும் தன் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தது. துதிக்கையால் பழங்களைப் பறித்துப் பறித்துச் சாப்பிட்டது. என்ன ருசி! என்ன ருசி!

தோட்டக்காரன் பார்த்தான். அநியாய

மாகத் தனது தோட்டம் யானைகளால் நாசமாவதை அவனால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. டமாரத்தை எடுத்து 'டம டம' என்று அடித்தான்.

அவ்வளவுதான்; என்னவோ ஏதோ என்று யானைகள் சிதறி ஓட ஆரம்பித்தன.

குட்டி யானையும் ஓடியது. 'டம டம' வென்று ஏதோ ஒன்று துரத்துவது போன்ற உணர்வு யானைக் குட்டிக்கு.

ஓடியது, ஓடியது ஓடிக் கொண்டே இருந்தது. ஓடும்போது காலில் கல் குத்தியது, முள் குத்தியது. ஒரே வலி.

மலைச் சரிவைத் தாண்டி இப்போது காட்டுக்குள் ஓடிக் கொண்டிருந்தது, நமது குட்டி யானை. இன்னும் அந்த 'டம டம' ஓசை அதைத் துரத்தியது. ஓடிக் கொண்டிருந்த குட்டி யானைக்குத் திடீரென்று தான் அதள பாதாளத்தில் விழுவது போல் இருந்தது.

வேறொன்றுமில்லை. யானை பிடிப்பவர்கள் அங்கே பெரிய பள்ளம் தோண்டி வைத்திருந்தார்கள். அதில்தான் குட்டி யானை விழுந்து விட்டது.

விழுந்தவுடன் பீதியினாலும் ஓடி வந்த களைப்பினாலும் குட்டி யானைக்கு நினைவு வந்தது. அதற்கு நினைவு திரும்பிய போது பள்ளத்தி லிருந்து மேலே தூக்கப்பட்டிருந்தது. அதன் கால்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தன. குட்டியைச் சுற்றிப் பலர் நின்று கொண்டிருந்தனர்.

அவர்களில் ஒருவன், ''டேய்! இது நம்ம ஊர் கோவிலில் இருந்த யானைக் குட்டி இல்லே?'' என்றான்.

''ஆமாண்டா. திடீர்னு காணாமல் போச்சே, அதே யானைக் குட்டி தாண்டா'' என்றான் இன்னொருவன்.

பிறகென்ன, நம்ம யானைக் குட்டி மீண்டும் காட்டூர் கோவிலுக்குக் கொண்டு போகப்பட்டது.

கோவிலில் தன் தாய் யானையைப் பார்த்தவுடன் மகிழ்ச்சியுடன் அதனிடம் ஓடியது குட்டி யானை. வருத்தத்துடன் இருந்த தாய் யானை குட்டியைத் துதிக்கையால் தடவிக் கொடுத்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது.

''அம்மா! இனி நான் உன்னிடம் சொல்லாமல் எங்கும் போக மாட்டேன்'' என்றது குட்டி யானை. பாவம் அதற்குத் தெரியுமா, தான் சந்தித்த கம்பீரமான யானைதான் தன்னுடைய அருமைத் தகப்பனார் என்று. அந்தப் பெரிய யானைக்கும் தெரியாது அந்தக் குட்டி யானைதான் தன் குழந்தை என்று!

சொல்லுங்கள், பார்க்கலாம்!

பத்திரிகைகளிலும், ரேடியோவில் வர்த்தக ஒலிபரப்பிலும் வரும் விளம்பரங்களை நீங்கள் ஊன்றிக் கேட்பீர்களா, படிப்பீர்களா? அப்படியானால் கீழ்க்கண்ட விளம்பரங்கள் எவற்றைக் குறிக்கின்றன என்று சொல்லுங்கள், பார்க்கலாம்!

—ஜெயா

1. பசியைப் பெருக்குவதோடு நின்றுவிடும் எந்த டானிக்கும் பாதி வேலையைத்தான் செய்யும்.......பெறுவீர். உண்ணும் மிகையான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றும்.
2. நாங்கள் பேக்கை மாற்றி விட்டோம்..... ஆனால் ஒருபோதும் பிஸ்கட்டை மாற்றவே மாட்டோம்.
3. முடியுமோ மோகன ரோஜா மலர்ச் செண்டு கொண்டு குடும்பத்தைத் தினமும் மகிழ்வூட்ட முடியுமோ! முடியுமே புதிய........ மூலம் முடியுமே!
4. கருமையான கூந்தலின் அருமையான வளர்ச்சிக்கு.......
5. ருசியானவை...... அருமையானவை..... பிரமாதமானவை.
6. அன்னையின் அன்பென அணைக்கும்....... மென்மையின் உருவான...... ....

விடைகள்: (1) இன்க்ரிமின் (2) பார்லே க்ளுகோ. (3) புதிய பிருகா ரோஸ் டால்க். (4) ரெமி ஹேர் ஆயில். (5) புதிய பார்லே பாப்பின்ஸ் பழரச மிட்டாய்கள். (6) க்ளாக்ஸோ பேபி பவுடர்.

□ □ □

தெரியாதது?

கைக்கடிகாரம்: ''சிறிய அளவில் சீராக மணிகாட்டும் கடிகாரம் தயாரிப்போருக்குப் பரிசு உண்டு'' என்று பிரிட்டிஷ் அரசு 1713-ல் அறிவித்தது. அறிவிப்பு வெளியான சுமார் ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகுதான் அப்படி ஒரு கடிகாரம் தயாராயிற்று. அப்படிப்பட்ட ''கைக் கடிகாரத்தை''த் தயாரித்து, இந்தப் பரிசைப் பெற்றார், ஹென் ஹாரிஸன் என்பவர்.

'ஸிப்': ஸிப்பைக் கண்டுபிடித்தது யார் என்பது பற்றித் தீராத சர்ச்சை. ஸ்வீடன் நாட்டு ஸான் பெக் என்கிறார் சிலர். அமெரிக்கரான டபிள்யூ. எல். ஜட்ஸன் என்கிறார் சிலர். இவர்தான், ஒவ்வொரு முறையும் காலிலே ஷூ போடும்போது அதன் கயிற்றை இழுத்துக் கட்டி முடிக்கச் சோம்பல் பட்டு, ஸிப் முறையைக் கண்டு பிடித்தாராம், 1893ம் ஆண்டில்.

—டி.எஸ்.வி.

கழுதை !

கழுதை நல்ல கழுதையாம்,
  கறுத்த வண்ணக் கழுதையாம் !
புழுதியிலே புரளுமாம்,
  பொறுமைசாலிக் கழுதையாம் !
காகிதத்தைத் தின்னுமாம்,
  காது நீண்ட கழுதையாம் !
காம்போதி ' பாடுமாம்,
  காலிடிக்க ஓடுமாம் !

மட்டில் லாத மூட்டைகளை
  மனதாரச் சுமக்குமாம் !
குட்டிச் சுவரைக் கண்டதும்
  கும்மாளம் போடுமாம் !
உப்பருகம் புல்லைத் தின்ன
  ஊரைச் சுற்றி அலையுமாம் !
தப்பாமல் கானலிலே
  தபசு பண்ணி நிற்குமாம் !

—புளியங்குடி ச. ஆ. கேசவன்





நல்லாரோடு உறவு கொள்க !

ஆற்றோடு உறவு கொண்டால்
  மீன்கி டைக்கும்
அன்போடு உறவு கொண்டால்
  அறம்த ழைக்கும்
காற்றோடு உறவு கொண்டால்
  வியர்வ டங்கும்
கனியோடு உறவு கொண்டால்
  சுவைகி டைக்கும் !

கூற்றோடு உறவு கொண்டால்
  உயிர் அடங்கும்
குளிரோடு உறவு கொண்டால்
  உடல்ந டுங்கும்
நாற்றோடு உறவு கொண்டால்
  நெல்த ழைக்கும்
நல்லாரோ டுறவு கொண்டால்
  நலம்கி டைக்கும் !

நல்லாரோ டுறவு கொண்டால்
  நலம் கிடைக்கும் — தம்பி
நல்லாரோ டுறவு கொண்டால்
  நலம் கிடைக்கும் !

—நாக முத்தையா

''கோகுலம்'' போற்றிடும் கண்ணனடி!

புல்லாங் குழலின் இசையினிலே — மூழ்கிப்
போயிடச் செய்பவன் கண்ணனடி !
எல்லா உலகும் உயிர்களுமே — அதில்
இயங்கிடச் செய்பவன் கண்ணனடி !

ஆயர்கள் சிறுவன் கண்ணனடி ! — இந்த
அகிலத்தின் நாயகன் கண்ணனடி !
மாயங்கள் செய்தே உலகையெலாம் — தினம்
மயக்கிடும் இறைவன் கண்ணனடி !

இடும்பைகள் தீர்ப்பவன் கண்ணனடி!—உலகம்
எங்கும் நிறைந்தவன் கண்ணனடி !
குடும்பத்தில் ஒருவன் கண்ணனடி! — என்றும்
கோகுலம் ' போற்றிடும் கண்ணனடி !


—நெல்லை ஆ. கணபதி





பாதிஸ்கானின் படையெடுப்புக்குப் பிறகு கடலில் ஆனந்தமாகக் குளிக்க வாய்ப்பே இல்லை. இன்று வாய்ப்புக் கிடைக்கவே ரஷீம் தன் தோழர்களுடன் உல்லாசமாகக் குளித்துக் கொண்டிருந்தான். அப்போது நவீன் பார்வையில் பட்டது...
ரஷீம், அதோ பாதிஸ்கானின் போர்க் கப்பல், யுத்தத் தளவாடங்களுடன் வருகிறது. நிறையப் போர் வீரர்கள் இருப்பார்கள் அதை....
வீராதி வீரன் — 13
கதை: கௌசிகன்
நவீன் திட்டப்படித் தோழர்கள் கடற்கரையை அடுத்துள்ள காட்டுக்குப் போனார்கள். நவீன் அங்கு ஏதேதோ பச்சிலைகள், காய்கள், பழங்களைக் கொண்டு ஒரு மருந்து தயாரித்தான். கிராமத்து பையனுக்குக் கைவந்த கலை அது.
இந்தா நீ கேட்டபடி பாட்டில்கள். போதுமா இன்னும் வேணுமா?
நவீன் காய்ச்சிய கஷாயத்தைப் புட்டிகளில் நிரப்பி கழுதையின் முதுகில் ஏற்றிக் கொண்டு கிளம்பினார்கள். இருட்டுக் காத்திருந்து, காவல்காரர்க்கு ம திருந்து, பதுங்கிப் பதுங்கியும் கூட நக ருக்குள் போக முடியவில்லை. அத்தனை காவல். சட்டென்று நவீனுக்கு ஒரு வழி புலப் பட்டது......
குண்டு வீச்சினால் சேதமடைந்திருந்த வீட்டிலிருந்து ஓர் அரிக்கேன் விளக்கைக் கொண்டு வந்தான்.
இந்தச் சுரங்கப் பாதை நகரத்துக்குள்ளே போகிறது. இது ஒரு கழிவு நீர் வாய்க்கால். இதன் வழியே நாம் புகுந்து விடலாம்.
சுரங்கப் பாதை வளைந்து திரும்பித் திரும்பி நீண்டு கொண்டிருந்தது. ரஷீமுக்கு நம்பிக்கை படவில்லை. ஆனால் நவீன் உறுதியோடு முன்னேறினான்...
அதிஷ்டம் நம் பக்கமிருக்கிறது, ரஷீம். நாம் சரியான இடத்துக்குத்தான் வந்திருக்கிறோம். அந்த ராணுவ வீரர்களுக்கு இங்குதான் உணவு தயாராகிறது.
நவீனின் நம்பிக்கை வீண் போகவில்லை. குறிப்பிட்ட இடத்தில் சுரங்கத்தின் விதானத்திலே ஒரு வழி - மேன் ஹோல் - கதவை மிதுதித் தலையால் அதன் கதவை நெம்பித் திறந்தான். ரஷீமும், நவீனும், ஜம்புவும் மற்றும் மேகலை ஏறி வந்தார்கள்.
நல்ல வேளையாகச் சமையலறையில் அதிக ஆட்கள் இல்லை. இருக்கும் ஒருவரும் அடுப்படியை நோக்கித் திசை திரும்பிவிட்டார்.



ம்பு ரஷீயின் உத்தரவுப்படி ஒரு கரண்டியை
டுத்துக் கொண்டு ஓடவே சமையல்காரன்
தை விரட்டியபடி வெளியே வந்தான்.
தயாராக இருந்த நஸீரும் ரஷீமும் அவன்
மீது பாய்ந்து அவனை அப்படியே சாக்குக்
குள் அமுக்கி விட்டார்கள்...
பின் தன் திட்டத்தை மட மட வென்று செயல்ப்
டுத்தினான். சுரங்கத்திலுள்ளிருந்த கழு
தயின் முதுகிலிருந்த கஷாய பாட்டில்களை
ம்பு ரஷீமிடம் கொண்டு வந்து தர...
அங்கிருந்த உணவுப் பொருள்கள் எல்லா
வற்றிலும் அந்தக் கஷாயத்தைக் கலந்து
பக்குவப் படுத்தினர்கள் மூவரும். சமையல்
காரன் ஒரு மூலையில் கட்டப்பட்டுக் கிடந்தான்.
கஷாயங் கலப்பதற்கு முன்னால் அங்கிருந்த
சுவை மிக்க உணவுகளில் நிறைய மூட்டை
கட்டித் தனியாக வைத்துக் கொண்டார்கள்
தங்களுக்காக. அவைகளுடன் வெளியேறும்
போது ஒரு காவல்காரனின் பார்வையில்
பட்டு விட்டார்கள்....
யாரது? என்ன கொண்டு போகி
றீர்கள்? எங்கே..? ஸ்டாப்! நில்..நில்..




ஓடி வந்த காவல்காரப் பாகிஸ்தானி ஒரு திருப்பத்தில்...
எங்கே போறாங்க? மாயமாக இருக்கே. எப்படி மறைய முடியும்? மந்திரமா?
அவர்கள் அவன் காலடியிலே மறைந்து போறா
கள் என்பது அவனுக்குத் தெரியுமா?
இப்படி வயிறாரச் சாப்பிட்டு ரொம்ப நாளாயிற்று நவீன். இன்னும் கொஞ்சம் போடு. நல்ல ருசியாகச் சமைத்திருக்கிறார்கள்.
உண்ட களைப்புத் தொண்டருக்கும் உண்டே. நல்ல உணவைப் போலவே நல்ல உறக்கமும் வந்தது அவர்களுக்
அதே வேளையில் பாகிஸ்தானியப் பாசறையில் கட்டுண்ட சமையல்காரன் விடுவிக்கப் பட்டான், சக தொழிலாளியால். ஆனால் உணவில் செய்யப் பட்டிருந்த கலப்படம் பற்றி அவர்களுக்குத் தெரியாது. உணவு பரிமாறப்பட்டது. அதை உண்ட சத்—
ஜைக்கெல்லாம்....
ஏய், குக்! இதென்ன
இப்படி? என்ன மேன்,
என்ன சமையல் செய்
நீ? இவ்வளவு பேரும் இ
போர்முனைக்குப் போக வே
டியவங்க. நிலைமையைப் ப
தா இன்னும் ஒரு வாரத்து
எழுந்திருக்க மாட்டாங்க போ
இருக்கே. பூ.. ம்பூ
இடியட்!...

மூளைக்கு வேலை


□ இந்தச் சுண்டெலி தன் வளையிலிருந்து வழிதவறி வந்து விட்டது. அம்மாவை விட்டுப் பிரிந்து பழக்கமில்லாதது மட்டுமல்ல, அதற்குப் பசி வேறு. ஆகவே வீட்டுக்குப் போயாக வேண்டும். ஆனால் நடுவிலே பூனையார் படுத்திருக்கிறார். நட்சத்திரக் குறியுள்ள பகுதிக்குப் போனால் இரண்டு பாதைகள் பிரியும். வந்த வழியை விட்டுவிட்டு வேறு வழியைப் பிடித்துக் கொண்டு முன்னேற வேண்டும். எப்படியோ பூனையாரிடம் அகப்படாமல் எலியார் தன் வளைக்குப் போக வழி காட்டுங்களேன், பார்க்கலாம்.



■ இங்குள்ள ஏழு வட்டங்களில் ஒன்று முதல் ஏழு இலக்கங்களை அமைக்க வேண்டும். முதல் கட்டத்தில் நான் ஏழைப் பொருத்தி விட்டேன். நீங்கள் ஒன்று முதல் ஆறு இலக்கங்களைத் தக்கபடி அமைத்தால் இதை மேலும் கீழும் குறுக்காகவும் கூட்டினால் ஆறு வழிகளிலும் ஒரே கூட்டுத் தொகை வரவேண்டும், முடியுமா உங்களால்?



□ பல முக்கோணங்களின் சேர்க்கையிலே உருவானது இந்தப் படம். இதில் மொத்தம் எத்தனை முக்கோணங்கள் உள்ளன?



6? 3? 5? 2? 4 = 4


10? 5? 3? 2? 9 = 8

■ மேலே உள்ள கணக்கில் வினாக்குறி உள்ள இடங்களில் எந்தக் கணிதக் குறிகள் இருந்தால் முடிவிலே அந்த விடை கிடைக்கும்?

□ *1456789* — இந்த எண்களைப் பயன்படுத்தி ஒரு கூட்டல் கணக்கு போட வேண்டும். கூட்டுத் தொகை *1,111* வரவேண்டும். முடியுமா?

— —
— —
— — —
1,1 1 1

■ புள்ளி உள்ள பகுதிகளை வண்ணப் பென்சிலால் மூடிப் பாருங்கள்.



விடைகள்:

வட்டங்களில் எண்கள்:

7 2 3
4
5 6 1

முக்கோணங்கள் மொத்தம்: இருபத்தி ஒன்று

கணிதக் குறிகள்:

6×3−5×2−4=4

10−5×3+2−9=8

கூட்டல் கணக்கு:

86+74+951=1,111

தை – தை – தையல் !



தையல் இயந்திரத்தை உருவாக்கிய திம்மோனீரின் திறமைக்கு அன்றைய உலகம் மதிப்புத் தரவில்லை. வறுமையிலேயே வாழ்ந்து மறைந்தார். திம்மோனீரின் திறமையை அவரது நாட்டு மக்கள் ஏற்காத அதே நேரத்தில் அமெரிக்காவில் இரு அறிவாளிகள் துணிகளைத் தைப்பதற்கான இயந்திரம் ஒன்றைக் காணத் தங்கள் மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தனர். ஒருவர் வால்டர் ஹண்ட். இவர் நியூயார்க் நகரைச் சேர்ந்தவர். சேஃப்டி பின்னைக் கண்டு பிடித்தவர் இவர்தான். மற்றொருவர் மாஸாசூஸெட்ஸ் மாகாணத்தவரான எலியாஸ் ஹோ என்பவர்.

ஹண்டினுடைய யந்திரம் திம்மோனீருடையதைப் போலவே வளைந்த ஊசி பொருத்தப்பட்டதாக இருந்தது. ஆனால் இதில் ஒரு முன்னேற்றம் என்னவென்றால் ஊசியின் முனையில் ஒரு துவாரம் செய்திருந்தார் ஹண்ட். தைக்கும் பொருளில் ஊசி துளைத்துச் சென்றதும் கீழே நூலில் ஒரு 'லூப்' ஏற்பட்டது. படுக்கைக் கோடாக ஒரு சிறிய 'ஷட்டில்' முன்னும் பின்னும் இயங்கி இந்த 'லூப்'பினுள் வேறொரு நூலை நுழைத்தது. இன்று 'லாக் ஸ்டிச்' என்கிறோமே, அதை ஹண்டினுடைய இந்த யந்திரம் செய்தது. இவ்வளவு இருந்தும் அசட்டு ஹண்ட் தம் யந்திரத்தைப் பதிவு செய்யாமல் ஏமாந்து போனார். ஆகவே, தையல் யந்திரப் போராட்டத்தில் ஹண்டின் முயற்சி பலனில்லாது போயிற்று.


தையல் யந்திரப் போராட்டத்தில் வெற்றி கண்டவர் எலியாஸ் ஹோ. அந்த வெற்றி அவருக்கு எளிதாகக் கிடைத்ததா? இல்லை. எலியாஸ் ஹோவினுடைய வாழ்க்கைவரலாறு சுவையும் சுவாரசியமும் கொண்டது.

1835ம் ஆண்டு. அமெரிக்காவிலுள்ள போஸ்டன் நகரில் ஒரு தொழிற்சாலை. அதன் முதலாளியை நோக்கி அரைப்பட்டினியும்வெளுத்த முகமுமாகத் தள்ளாடியபடி ஒரு பையன் வந்து நின்றான். அந்தத் தொழிற்சாலையில் தன்னை ஒரு மெக்கானிக்காக ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினான் அந்தப் பையன்.

"ஆறு வயதிலே என் அப்பாவின் நிலத்தில் வேலை செய்யப் போய்விட்டேன். ஆகவே, முறையாகக் கல்வி கற்க முடியவில்லை" என்று தன் தகுதியை மறைக்காமல் கூறினான் பையன்.

வறுமையினால் வாட்டப்பட்ட அந்தப் பையனை முதலாளி பார்த்தார். பசியினால் வாடி இருந்தாலும் அவன் பலசாலி என்பது தெரிந்தது. சம்பாதித்தே ஆக வேண்டும் என்ற நிலை அவனுக்கு. கம்பெனியின் மெக்கானிக் டேவிஸுக்கு அந்தப் பையனிடம் ஏதோ ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. ஒரு வாய்ப்புக் கொடுத்துப் பார்ப்போமே என்று எண்ணினார். இருந்தாலும் சந்தேகம், 'எங்கே இவன் இங்கு தாக்குப் பிடிக்கப் போகிறான்?' என்று. ஏமாற்றத்தோடு அவனைத் திருப்பி அனுப்ப அவருக்கு மனமில்லை. அந்தப் பையன், தான் ஒரு மெக்கானிக்காகத் தகுதி உடையவன் என்பதை விரைவிலேயே நிரூபித்தான். டேவிஸுனுடைய பிரதம உதவியாளனாக உயர்ந்தான். அந்தப் பையன்தான் எலியாஸ் ஹோ. இதற்கு ஐந்து வருஷங்களுக்குப் பிறகு நிகழ்ந்த ஒரு சம்பவம் இளைஞன் எலியாஸுடைய வாழ்க்கையையே மாற்றி அமைத்தது.

எலியாஸ் பிறந்தது 1819ம் ஆண்டில், மாஸாசூஸெட்டிலுள்ள ஸ்பென்ஸர் என்ற ஊரில். ஒரு நாள் எலியாஸ் தன் நிறுவனத்து முதலாளியோடு இரண்டு பேர் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டான். அவர்கள் தாங்கள் தயாரிக்க விருக்கும் ஒரு புதிய யந்திரத்தின் விளக்கப் படங்களை முதலாளியிடம் காட்டிக் கொண்டிருந்தார்கள். மீன் பிடி வலைகளைப் பின்னும் ஒரு யந்திரத்தின் வரைபடம் அது.



ஹோவின் யந்திரம்
மேலே : எலியாஸ் ஹோ

மெக்கானிக் டேவிஸ் அவர்களிடம் கூறுவதை எலியாஸ் கேட்டான். "உங்கள் கண்டுபிடிப்பினால் நீங்கள் செல்வந்தராக வேண்டுமானால் இதெல்லாம் பயன்படாது. பெண்களின் தையல் வேலைக்கான ஒரு தையல் யந்திரத்தைக் காண முயற்சி செய்யுங்கள். அவர்களுடைய கை உழைப்பை அந்த யந்திரம் ஏற்கக் கூடியதாக இருக்க வேண்டும்'.

அந்த விநாடியே எலியாஸ் ஹோவின் உள்ளத்தில் ஓர் உறுதி ஏற்பட்டது.

''தையல் யந்திரத்தை எப்படியும் நானே உருவாக்குவேன் !'' இந்த முடிவோடு தன் விருப்பத்தை டேவிஸிடம் கூறி நிலையான வருவாயைத் தரும் அந்த வேலையை ராஜிநாமா செய்துவிட்டு வெளியேறினார் ஹோ.

மிகப் பாடுபட்டுச் சேமித்திருந்த தொகையைச் செலவு செய்து வாழ்ந்தபடி யந்திரத்தை உருவாக்குவதில் ஈடுபடலானார். பகலெல்லாமும் இரவில் வெகுநேரம் வரையும் உழைத்தார். எவ்வளவோ தடைகள், கஷ்டங்கள்.

ஒரு நாள் ஒரு நெசவாளியின் வீட்டு வழியே போகும்போது ஒரு காட்சியைக் கண்டார். ஜன்னல் வழியாக, நெசவாளி தன் தறியில் வேலை செய்வது தெரிந்தது. தறியில் பாவு (ஷட்டில்) முன்னும் பின்னும் போவதையும் ஒவ்வொரு முறையும் அது ஒரு முடிச்சை ஏற்படுத்துவதையும் கண்டார் ஹோ. 'ஷட்டில் — இதுதான் என் யந்திரத்தின் முக்கிய பிரச்னை.' இப்படித் தமக்குள் கூறிக் கொண்டார் எலியாஸ்.

வீட்டுக்கு வந்ததும் தாம் உருவாக்கி இருந்த மரத்தாலான யந்திரத்தை மாற்றி அமைத்தார். 1844ம் ஆண்டு மாரிக் காலத்தில் எலியாஸ் தம் யந்திரத்தை அநேகமாகப் பூர்த்தி செய்துவிட்டார். அதே சமயம் அவருடைய கையிருப்பு அத்தனையும் கரைந்து விட்டது. அன்றாட உணவுக்கே திண்டாட்டமான நிலை. தம் கண்டுபிடிப்பு வெறும் கனவாகிப் போய்விடுமோ என்றுகூடக் கவலைப் பட்டார் ஹோ. எல்லாவற்றையும் கைவிட வேண்டியதுதானோ என்ற நிலையில் ஹோவின் பழைய பள்ளித் தோழன் கைகொடுக்க முன் வந்தான். ஜார்ஜ் ஃபிஷர் என்பது அவன் பெயர். ''என் வீட்டில் விருந்தாளியாகத் தங்கிக் கொள். உன் யந்திரத்தைப் பூர்த்தி செய். உன் கண்டுபிடிப்பு நம் இருவருக்கும் அதிர்ஷ்டத்தைத் தரட்டும்'' என்றான் ஃபிஷர். இருவரும் கூட்டாளிகளானார்கள். அந்த ஆண்டின் வசந்த காலத்தில் எலியாஸ் தம் நண்பனுக்கு ஒரு 'சூட்' தைத்துக் கொடுத்தார் தாம் உருவாக்கிய யந்திரத்தில். ஒரு நிமிஷத்துக்கு முந்நூறு தையல்களைப் போட்டது அது.

கனவு நனவாகியது. அதை இனி காசாக்கும் வழியைக் காண வேண்டுமே. பாஸ்டன் நகரத்துத் தையல் கூடங்களில் தம் யந்திரத்தை நிறுவச் செய்தாக வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார் ஹோ. ஒவ்வொரு தொழிலகமாக ஏறி இறங்கினார். எல்லாரும் தலையசைத்து விட்டார்கள். ''உன்னுடைய முட்டாள்தனமான காரியத்தைக் கொண்டு வந்து காட்டி எங்கள் பொன்னான நேரத்தை வீணாக்காதே, போ !'' என்றார்கள்.

''இப்படியெல்லாம் பிதற்றிக் கொண்டு திரியாதே. உன்னையும் உன் கண்டுபிடிப்பையும் பற்றிக் கேட்டால் எங்கள் தையல்காரப் பெண்கள் தாங்கள் வேலை செய்வதையே நிறுத்திக் கொள்ளுவார்கள். போய்யா போ...!'' என்று விரட்டினார்கள் சிலர்.

ஹோ மனம் தளரவில்லை. தம் கண்டு பிடிப்பின் செயல் திறனை எல்லாரும் அறியச் செய்ய முடிவு கட்டினார். கையால் தைக்கும் பெண்களுக்கும் தம் தையல் யந்திரத்துக்கும் போட்டி ஏற்படுத்தினால்? ஹோ உடனே தீவிரமாகச் செயல்படலானார். நகரத்தில் ஒரு கூடத்தை வாடகைக்குப் பேசினார். நகரில் மிக வேகமாகத் தைப்பவர்கள் என்று புகழ்பெற்ற ஐந்து பெண்களுக்குச் 'சவால்' விட்டார், தம்முடைய யந்திரத்துடன் தையலில் போட்டியிடும்படி.

குறிப்பிட்ட நாளும் வந்தது. மக்கள் இந்த அதிசயமான போட்டியைக் காணக் கூடி இருந்தனர். கூடத்தின் ஒரு பக்கம் புகழ்மிக்க ஐந்து தையல்காரப் பெண்கள் தாங்கள் தைக்க வேண்டிய துணியுடன் தயாராக உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுடைய விரல்கள் துருதுருத்துக் கொண்டிருந்தன, போட்டி ஆரம்பமாவதை எதிர்நோக்கி. அவர்களுக்கு எதிர்ப்புறத்தில் எலியாஸ் ஹோ தம்முடைய விநோத 'ஷட்டில் லாக் ஸ்டிச்' யந்திரத்துடன் உட்கார்ந்திருந்தார். நடுவர் உத்தரவு தரப் போட்டி ஆரம்பமாகியது. இதுவரையும் செயல்படாத வகையில் அந்த ஐந்து பெண்களும் அசுர வேகத்தில் தைக்கலா



னார்கள். போட்டியாயிற்றே ! ஆனால், ஹோவின் யந்திரத்தின் முன்னே அவர்கள் வேகம் எடுபடவில்லை. தைக்க வேண்டியதை ஏழே நிமிஷங்களில் தைத்து முடித்துவிட்டார் ஹோ. அந்தக் கைதேர்ந்த கைத் தையல்காரிகள் இவர் முடித்து அரை மணிக்குப் பிறகுதான் தங்கள் பணியை முடித்தார்கள் !

திகைப்பினால் திறந்த வாயுடன் அமர்ந்திருந்த நடுவர்களிடம் ஹோ தம் தையலைக் காட்டினார். ''ஹோ! நீ போட்டியில் வெற்றி பெற்றது மட்டுமல்ல. உன் யந்திரத் தையல் அவர்களுடைய கைத் தையலைவிடச் சுத்தமாகவும் முழுமை பெற்றதாகவும் இருக்கிறது'' என்று ஒருமுகமாகப் பாராட்டுத் தெரிவித்தார்கள். எலியாஸ் ஹோவிற்கு— அவர் தையல் யந்திரத்துக்கு — மாபெரும் வெற்றி. ஆனாலும் அவருடைய தொல்லைகள் தொலையவில்லை, தொடர்ந்தன.

மகத்தான இந்த வெற்றிக்குப் பிறகும் கூட ஹோவின் நண்பன் ஃபிஷர் அவருக்கு உதவ மறுத்துவிட்டான். இது வரையில் ஆயிரம் பவுன்கள் வரை ஹோ தன் யந்திரத்தை முடிக்க உதவியிருந்தான் நண்பன். இனி அந்த யந்திரத்தை விற்பனைக்குத் தயாரிக்க வேண்டுமானால் பெரும் முதலீடு செய்தாக வேண்டும். ஒவ்வொரு யந்திரத்துக்கும் நூறு பவுன்கள் செலவு செய்தாக வேண்டும். ''இது என்னால் சாத்தியமில்லை. இனி நான் உன் கூட்டாளியாக இருக்க முடியாது'' என்று கூறி ஒதுங்கிக் கொண்டான் ஃபிஷர்.

மறுபடியும் எலியாஸைக் கஷ்டங்கள் சூழலாயின. இப்போது எலியாஸ் ஹோ தனி மனிதரல்ல. திருமணமாகி ஒரு குழந்தையும் இருந்தது. ஆகவே, வேறு வழியின்றித் தம் தகப்பனாரின் நிலத்தை நம்பிக் கிராமத்துக்கு நடந்தார். கையில் ஒரு காசில்லாமல் ஒரு காலத்தில் எப்படி அங்கிருந்து கிளம்பினாரோ அதே நிலையில் இன்று அங்கு திரும்பினார். எஞ்சின் டிரைவர் வேலை ஒன்று கிடைத்தது. ஆனால் அந்த வேலையிலேயே முடங்கிக் கிடக்க விரும்பாத ஹோ தம் யந்திரத்தை இங்கிலாந்தில் விற்கலாம் என்று 1846ல் பயணமானார்.


லண்டனில் ஒரு தொழிலதிபர் வாரத்துக்கு மூன்று பவுன் வாடகை கொடுத்து ஹோவினுடைய யந்திரத்தைக் கூலிக்கு அமர்த்திக் கொண்டார் ; அண்டர்வேர்- உள்ளாடை — தயாரிப்பதற்காக. இதனால் அந்தத் தொழிலதிபரின் செல்வம் பெருகிற்று. ஆனால் எலியாஸின் வறுமை போகவில்லை. தம் யந்திரத்தை ஓர் அடகுக் கடையில் வைத்துக் கொஞ்சம் பணம் பெற்றுத் தாய் நாடு திரும்பத் திட்டமிட்டார். கப்பல் கட்டணத்தைச் செலுத்தக் கப்பலிலே சமையல்காரராகச் சேர்ந்து அமெரிக்கா திரும்பினார். மறுபடியும் போஸ்டன் நகரில் ஒரு வேலை தேடிக் கொண்டார்.

ஹோ இங்கிலாந்திலிருந்தபோது இவருடைய யந்திரத்தின் மாதிரியைத் திருடிக் கொண்டு அதே போல் வேறு பலர் தையல் யந்திரங்கள் தயாரித்து அதை விற்பனைக்கும் கொண்டு வந்திருந்தார்கள். அடிப்படை அமைப்பு ஹோவினுடையது. ஆனால் அதில் பல சீர்திருத்தங்களைச் செய்திருந்தார்கள். இவர்களில் இஸாக் மெரிட் சிங்கர், சேமர், வில்லியம் க்ரோவர் ஆகியோர் முக்கியமானவர்கள். சிங்கரின் யந்திரம் புகழ் பரப்பிக் கொண்டிருந்தது. தையல் யந்திரத்தை உருவாக்கியது ஒருவர். பலன் அனுபவிப்பவர் வேறு பலர்.

எலியாஸ் ஹோவின் நிலை எப்படி இருக்கும்? நல்ல சத்துணவு இல்லாமையால் ஹோவின் மனைவி நோய்வாய்ப்பட்டு இறந்தாள். துன்பங்கள் தொடர்ந்துதான் வரும் போலும். தாம் ஏமாற்றப்பட்டோம் என்ற வேதனையிலே வாடி நின்றபோது அவரது துன்பம் துடைக்க வந்தார் ஒருவர். அவர் முன்பு ஹோ நடத்திய தையல் போட்டியில் நடுவர்களாக இருந்தவர்களில் ஒருவர். லண்டனில் ஓர் அடகுக் கடையிலிருந்த ஹோவின் யந்திரத்தை மீட்க உதவினார், இந்த நல்லவர். ஹோ தம் யந்திரத்தின் உரிமைக்காக நீதிமன்றத்தின் உதவியை நாடினார். எத்தனையோ வாதப் பிரதிவாதங்கள். ஹோவுக்குச் சாதகமான சில அம்சங்கள் இருந்தபோதிலும்கூட முழு வெற்றி அவருக்குக் கிடைக்கவில்லை. வழக்கு நடந்தபோது ஹோவின் யந்திரத்தைவிட மற்றவர்களின் யந்திரங்களில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. இருந்தாலும் அவைகளின் வளர்ச்சிக்கு ஹோவின் யந்திரமே அடிப்படை என்பதை யாராலும் மறுக்க முடியவில்லை. ஆனால் ராயல்டியின் முழுப் பயனையும் ஹோவுக்கு வழங்கவில்லை நீதிமன்றம். 'தையல் யந்திரக் கழகம்' ஒன்றை ஏற்படுத்தினார்கள். விற்பனையாரும் ஒவ்வொரு யந்திரத்துக்கும் பதினைந்து டாலர்கள் இக்கழகத்தின் நிதியில் சேர வேண்டியது. இந்த நிதியை ஐந்து பாகமாக்கினார்கள். இந்த உரிமைப் போரில் ஈடுபட்டவர் ஹோவைத் தவிர நான்கு பேர். ஆகவே இந்த ஐவருக்கும் ஒரு தொகை சமமாகப் பங்கிடப்பட்டது. இத்தனை கஷ்டங்களுக்குப் பிறகு பொருளும் புகழும் வரலாயின ஹோவுக்கு. வழக்காடித் தம் உரிமையை நிலைநிறுத்தினார் ஹோ. ஆனாலும் இதற்குள் சிங்கரின் யந்திரம் ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டு எங்கும் எல்லோராலும் பயன்படுத்தப்பட்டது. இது ஹோவுக்குத் தெரியாது. 1867ல் ஹோ இறந்தார். அதற்கு முன்னால் இவர் தமது யந்திரத்தின் உரிமையை மக்களுடையதாக்கி விட்டார்.

தைப்பதில் முன் அனுபவமும் ஆற்றலும் இல்லாதவர்கள்கூடத் தைக்கக் கூடிய ஒரு சாதனத்தை உருவாக்கியதற்காக எலியாஸ் ஹோவைப் பெண்ணுலகம் என்றும் வாழ்த்தும். நிராதரவான பெண்களுக்கு வாழ்வளிக்க வகை செய்தவராயிற்றே ஹோ. இன்று தையல் யந்திரங்களில் 2000மாதிரிகள் இருக்கின்றன. நிமிஷத்துக்கு 5000 தையல்களைப் போடும் ஆற்றல் கொண்ட யந்திரங்களும் உருவாகியுள்ளன. இத்தனை முன்னேற்றத்துக்கும் அஸ்திவாரமாக இருப்பது எலியாஸ் ஹோவினுடைய யந்திரந்தானே?


— கிருஷ்ணவேணி



பாட்டி: குதிரை வண்டி விளையாட்டா? எந்த ஊருக்குப் போறே?
பெண்: எனக்குத் தெரியாது. நான்தான் குதிரையாச்சே? வண்டிக்காரனைக் கேளுங்கோ!
ாமா: என் கதையைக் கேட்டு உங்க
க்கும் புல்லரிக்கிறதா?
ரயன்கள்: அதென்னமோ வேறு
த்தில் போய் உட்காரலாம், வாங்கோ
மா!
சிரிக்கச் சிரிக்க...
இதுக்கெல்லாம்
காசு போட மாட்டாங்க!
இதுக்கு ஒரு வழி
பண்றேன்.
க் கணக்கைப் போட்டுக் கொண்டு
தவர்களுக்குத் தலையில் ஓங்கி ஒரு குட்டு
ழும் என்ற உபாத்தியாயரின் எச்சரிக்
க்கு நேர்ந்த விபரீத பலன்தான் இது.
சாமா
? ?
"என்ன பண்றது? குழந்தை அழுகையை நிறுத்திப் பாட்டைக் கேட்கமாட்டேங்கறதே!"
"சரி! நீங்க உங்க பாட்டை நிறுத்தி அதன் அழுகையைக் கேளுங்கோ!"

டமடம, டம்டம்! டமடம, டம்டம்! பறையறைவோன் தெருத் தெருவாகப் பறையை அறைந்து கொண்டு பின்வருமாறு கூவிக்கொண்டு போனான்: ''இதனால் யாவருக்கும் தெரிவிப்பது என்னவென்றால், அன்புபுரி நாட்டின் அமைச்சர் ஆனந்தர் காலமாகி வெகு நாட்களாகிவிட்டபடியால், நாட்டுக்குப் புதிய அமைச்சரைத் தேர்ந்தெடுக்க, வருகிற கோகுலாஷ்டமி அன்று மூன்று போட்டிகள் நடத்தப்படும். 'யார் வேண்டுமானாலும் கலந்து கொள்ளலாம். மூன்று போட்டிகளிலும் வென்றவரே மந்திரியாகத்தேர்ந்தெடுக்கப்படுவார். இது ராஜா ஆணை! ஆணை! டமடம டம்டம்!''





இந்த அறிவிப்பை ஆலகாலன், காலகண்டன், நீலமேகன் என்ற மூவரும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அம்மூவரும் அன்பு புரியின் பிரஜைகள். அறிவாளிகள். திறமைசாலிகளும் கூட. அறிவிப்பைக் கேட்டவுடனேயே ஆலகாலனும், காலகண்டனும் தத்தமக்குத் தான் மந்திரி பதவி என்று தலைகால் தெரியாமல் துள்ளிக் குதித்தார்கள். தம்மை மிஞ்ச யாரால் முடியும் என்று மார் தட்டினார்கள். காரணம் அவர்களுக்குக் கொஞ்சம் கர்வம் அதிகம். அறிவாளிகளானாலும் அடக்கம் வேண்டாமா? அவசரம்தான் படலாமா?

ஆனால் நீலமேகன் அடக்கமானவன். அதோடு அறிவுக் கூர்மையும் உடையவன். இவன் ஆலகாலன், காலகண்டனின் கர்வத்தைக் கண்டு தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டான். போட்டி நடக்கப் போகும் நாள் வருகிற வரையிலும் அமைதியாகவே இருந்தான்.

கோகுலாஷ்டமி வந்தது. அன்று தான் போட்டி நாள். அரச சபையில் எள் போட்டால் எண்ணெயாகும்படி கூட்டம் நிரம்பி வழிந்தது. போட்டியில் கலந்து கொள்ள வந்தவர்களும், போட்டி நடப்பதைக் காண வந்தவர்களுமாக ஒரே கூட்டம்! அரசன் வந்து சிம்மாசனத்தில் உட்கார்ந்ததும் போட்டி ஆரம்பமாயிற்று. மொத்தம் மூன்று போட்டிகள் நடக்குமென்று அறிவிக்கப்பட்டது.

முதல் போட்டியாக அரசன் போட்டிக்கு வந்தவர்களை நோக்கி, ''சாம்பலால் கயிறு திரித்துக் கொண்டு வாருங்கள்'' என்றான். ஆலகாலன், காலகண்டன் உள்பட எல்லோரும் திகைத்துப்போய் விட்டனர். ''சாம்பலிலாவது, கயிறு திரிப்பதாவது? முடியாத காரியத்துக்குத்தான் மணலைக் கயிறாகத் திரிப்பது என்பார்கள். மணலுக்குப்பதில் இங்கு சாம்பல் இது என்ன பைத்தியக்காரத்தனம்!'' என்று எண்ணினர். ஆலகாலனும் காலகண்டனும் சாம்பலில் தண்ணீரை விட்டுப் பிசைந்து கயிறு இரிக்கப் பார்த்து முடியாமல் விழித்தனர். ஆனால் நீலமேகன் இதைக் கேட்டுக் கவலைப்படவில்லை. அவன் தான் அறிவுடையவன் ஆயிற்றே! ஒரு கயிற்றுத் துண்டை எடுத்துத் தட்டில் வைத்து அதை எரித்தான். கயிறு முழுவதும் எரிந்ததும் அக்கயிறு அதன் உருவத்திலேயே சாம்பலாகத் தட்டில் இருந்தது. அதை அப்படியே தட்டில் எடுத்துக் கொண்டு போய் அரசனிடம் கொடுத்தான். முதல் போட்டியில் நீலமேகனே வென்றதாக அறிவிக்கப்பட்டது.

அடுத்த போட்டிக்காக அரண்மனைத் தோட்டத்திலுள்ள ஒரு குளக்கரைக்கு

எல்லாரையும் அழைத்துச் சென்றார் அரசர். ''இந்தக் குளத்தில் ஒரே ஒரு மீன் இருக்கிறது. மீன் பிடிக்கும் சாதனம் எதுவும் இல்லாமலே அந்த மீனைப் பிடிக்க வழி இருக்கிறதா?'' என்று கேட்டார். உடனே ஆலகாலன் தன் கையிலிருந்த ஈட்டியை அந்த மீனை நோக்கி எறிந்தான். ஆனால் ஈட்டி வீச்சு நஷ்டமானதுதான் மிச்சம். மீன் நீருக்கடியில் தப்பிப் போய் விட்டது. காலகண்டன் தன் உடைகளைக் களைந்துவிட்டு நீருக்குள் பாய்ந்து முழுகி வெகுநேரம் வரைக்கும் மீனைத் தேடு தேடென்று தேடிப் பிடிக்க முயன்றும் முடியாமல் களைத்துப் போய்க் கரை ஏறினான். ஆனால் நீலமேகன், அமைதியாகச் சென்று ஒரு கொட்டாங்கச்சியை எடுத்துக்கொண்டு அதன் மூலம் குளத்திலுள்ள நீரை இறைக்க ஆரம்பித்தான். அவன் செய்கையைப் பார்த்து எல்லோரும், ''இது என்ன, பைத்தியக்காரத்தனம்!''



என்று கேலியாகச் சிரித்தனர். அதைப் பார்த்த நீலமேகன், ''உங்களுக்கு இது வேடிக்கையாகத் தோன்றலாம். ஆனால் மற்ற முறைகளைவிட இத்தமுறையில் முயன்றால், வேறு மீன் பிடி சாதனம் இல்லாமலே, என்றாவது ஒரு நாள் நிச்சயம் அந்த மீன் என்னிடம் அகப்பட்டுத்தானே ஆக வேண்டும்?'' என்றான். அவனது நம்பிக்கையையும் உறுதியையும் கண்ட மக்கள் வியந்து பலமாகக் கைதட்டினர். இம்முறையும் நீலமேகனே வென்றதாக அரசன் தீர்ப்பளித்தான்.

மூன்றாவது போட்டி அரசன் கேட்கும் ஒரு கேள்விக்கு விடை சொல்லும் போட்டி. ''உங்களை இந்த நாட்டின் மந்திரியாக்கி விட்டேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதற்குப் பிறகு கொஞ்ச நாட்களில் நான் அநீதியாக ஆட்சி புரிவதாகவும் அந்த என் ஆட்சியைக் கண்டு ஒருவன் என்னை எதிர்ப்பதாகவும் வைத்துக் கொள்ளுங்கள். அவனுக்கு நீங்கள் என்ன தண்டனை கொடுப்பீர்கள்?'' என்று கேட்டான்.

ஆலகாலன், ''அவ்வாறு உங்களை எதிர்ப்பவன் கண்கள் இரண்டையும் தோண்டியபின் அவனை நானே என் கத்தியால் குத்திக் கொன்றுவிடுவேன்'' என்றான்.

காலகண்டன், ''அவ்வாறு மன்னனை எதிர்ப்பவனைக் கழுவிலேற்றி நாய் நரிகளுக்கு இரையாகப் போடுவேன்'' என்றான். ஆனால் அறிவுக் கூர்மை வாய்ந்த நீலமேகனோ, ''அரசே! அவனுக்குத் தண்டனை வழங்குவது ஒரு புறமிருக்கட்டும். நீங்கள் என்னை இந்த நாட்டின் மந்திரியாகத் தேர்ந்தெடுத்த பிறகு, நீங்கள் அநீதியாக ஆட்சி புரிய நான் இடங் கொடுப்பேனா? உடனே இடித்துக் கூறி உங்களைத் திருத்திவிட மாட்டேனா? என்னை மந்திரியாகப் பெற்றபின் நீங்கள்தான் அநீதியாக ஆட்சி செய்வீர்களா? இப்படி நீங்கள் அநீதியாக ஆட்சி செய்ய நான் இடங் கொடுக்காத போது உங்கள் ஆட்சியை எதிர்த்து யார் கலகம் செய்யப் போகிறார்கள்? அதை முதலில் சொல்லுங்கள்'' என்று கேட்டான். அவனது சாமர்த்தியமான பதிலைக் கேட்ட அரசன் மகிழ்ச்சி மிகுதியால் அவனை அப்படியே கட்டிக் கொண்டான்.

அப்புறம் என்ன? நீலமேகன்தான் நாட்டின் புதிய மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். போட்டியில் தோல்வியுற்ற ஆலகாலனும் காலகண்டனும் வெட்கம் அடைந்து தங்கள் கர்வத்தை விட்டொழித்தனர்.

-ஆர். நடராஜன்

சிங்கத்தின் தலைவலி

ஒரு காட்டில் ஒரு சிங்கம் இருந்தது. அந்தக் காட்டின் ராஜா அந்தச் சிங்கம் தான். அந்தச் சிங்க ராஜாவுக்கு ஒரு புலி மந்திரி இருந்தது. அந்தப் புலி மந்திரி மிகவும் பொறாமை பிடித்தது. தந்திரசாலியும் கூட. அந்தச் சிங்க ராஜாவினுடைய குடும்ப வைத்தியர் யானை. சிங்க ராஜாவிடம் அந்த யானைக்கு நல்ல பெயர். யானை வைத்தியரைக் கண்டால் புலி மந்திரிக்குப் பிடிக்காது. 'நேற்று வந்த யானை, ராஜாவிடம் நல்ல பெயர் வாங்கிக் கொள்வதாவது?' என்று ஒரே எரிச்சல். எப்படியாவது அதைச் சிங்க ராஜாவிடமிருந்து விலக்க முயற்சி செய்தது புலி.

சிங்க ராஜாவிடம் எதையெல்லாமோ சொல்லி அதன் மனத்தை மாற்றப் பார்த்தது. ஆனல் சிங்க ராஜா அதையெல்லாம் காதில் போட்டுக் கொள்ளவில்லை. எறும்பூரக் கல்லும் தேயுமல்லவா? நாளாவட்டத்தில் சிங்க ராஜாவும் சிறிது மனமாற்றம் அடைந்தது. யானையை அரண்மனைக்கு வர வேண்டாம் என்று சொல்லி விட்டது.

ஒரு நாள் சிங்க ராஜாவுக்குத் திடுமென்று தலைவலி வந்தது. தலைவலியென்றல் அப்படியிப்படி இல்லை! சிங்க ராஜாவினல் பொறுக்கவே முடியாத தலைவலி. மந்திரி புலி என்னவெல்லாமோ செய்து பார்த்தது. ராஜாவின் தலைவலி போகவில்லை.

சிங்க ராஜாவுக்குத் தலைவலி என்று கேட்டவுடன் யானை பறந்தோடி வந்தது. ராஜாவிடம் தலைவலிக்கான காரணத்தைக் கேட்டது. ''தூங்கிக் கொண்டிருந்தேன். திடுமென்று தலைவலி வந்துவிட்டது'' என்றது சிங்க ராஜா.


யானை உடனே ராஜா தூங்கிய இடத்தைப் போய்ப் பார்த்தது. அங்கு கட்டெறும்புகள் சாரி சாரியாகப் போய்க் கொண்டிருந்தன. சிங்கத்தின் தலைவலிக்கான காரணத்தைக் கண்டுபிடித்து விட்டது யானை. ஏதோ ஓர் எறும்பு சிங்க ராஜாவின் காதுக்குள் போய்விட்டது. அதுவே தலைவலிக்குக் காரணம்.

எறும்பை எப்படி வெளியே கொண்டு வருவது? யானை யோசனை செய்து கொண்டிருக்கும்போது அங்கு ஒரு நரி வந்தது. யானை நரியிடம் சிங்கத்தின் தலைவலியைச் சொல்லி யோசனை கேட்டது. நரி ஒரு தேன் அடையைக் காட்டித் தேனை எடுத்து வரச் செய்தது. ''இந்தத் தேனைச் சிங்கத்தின் காதின் மேல் விட்டால் தேன் வாசனைக்கு எறும்பு வெளியே வந்துவிடும்'' என்றது.

யானை உடனே சிங்க ராஜாவிடம் சென்று அதைப் படுக்கச் சொல்லி, பிறகு ஒரு சொட்டுத் தேனை அதன் காதின் முனையில் வைத்தது. எறும்பு தேனின் வாசனைக்கு வெளியே வந்து விட்டது. ராஜாவின் தலைவலியும் நின்றது. சிங்க ராஜாவுக்கு சந்தோஷம் தாங்கவில்லை. ''உனக்கு வேண்டியதைக் கேள், தருகிறேன்'' என்றது.

புலியை அடக்க இதுவே சமயம் என்று உணர்ந்த யானை உடனே, ''மகாராஜா! இதை எனக்கு என்னுடைய குருநாதர் சொல்லித் தந்தார். அவருக்கு ஒரு புலி வால் வேண்டுமாம். அதைக் கொடுத்தால் போதும்'' என்றது. இதைக் கேட்ட ராஜா, ''புலி வால்தானே?'' என்று தன் மந்திரி புலியைப் பார்த்தது. ராஜாவின் விருப்பம் அறிந்த புலியும், ''இந்தா என் வாலை எடுத்துக் கொண்டு போ'' என்றது. இதற்காகக் காத்திருந்தாற்போல் எல்லா மிருகங்களும் அதன் வாலை அறுத்து விட்டன. புலி தன் கொட்டம் அடங்கிப் போய் நின்றது. யானையைப் பழையபடி தன் வைத்தியராக வைத்துக் கொண்டு சிங்க ராஜா சந்தோஷமாக இருந்தது.

— **என். ஆர். விமலா தேவி**




பிளாட்டினம்

கேள்விப்பட்ட பெயராக இருக்கிறதில்லையா? பிளாட்டினம் விழாக் கொண்டாட்டங்களைப் பற்றிப் படித்திருப்பீர்கள். பிளாட்டினம் ஓர் உலோகம். அற்புதமான உலோகம். மிகவும் மதிப்பு வாய்ந்த உலோகம். ஆனால் இது கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில் 'உபயோகமற்றது, எதற்கும் பயனில்லாதது' என்று நினைத்தார்கள். இதன் அருமையை அறிந்து கொள்ளப் பல வருஷங்களாயிற்று. அழுக்கான வெள்ளை நிறமுடையது இந்த உலோகம். பிளாட்டினம் என்ற பெயர் இதற்கு எப்படி வந்தது? ஸ்பானிஷ் மொழியில் 'ப்ளாடா' என்றால் 'வெள்ளி'. இது வெள்ளியைப் போல் இருந்ததால் தரம் குறைந்த வெள்ளி என்று இதை எண்ணினார்கள். அதிலிருந்தே பிளாட்டினம் என்ற பெயர் நிலைத்து விட்டது.

தாமிரத்தை விட உறுதியானது, தங்கத்தைப் போலச் சுலபமாக வளைந்து கொடுக்கக் கூடியது இந்தப் பிளாட்டினம். ஓர் அவுன்ஸ் பிளாட்டினத்தை மெல்லிய கம்பியாக நீட்டினால் எவ்வளவு நீளத்துக்கு அந்தக் கம்பி இருக்கும் தெரியுமா? மேற்கு ஐரோப்பாவிலுள்ள கொலோன் நகரையும் மாஸ்கோவையும் இணைக்கும் அளவுக்கு. ஏன் இப்படி ஐரோப்பாவையும் ரஷ்யாவையும் அளவுக்குக் குறிப்பிடுகிறேன் தெரியுமா?





இதற்காகவாவது அட்லாஸை எடுத்து இந்த ஊர்களைத் தேடிப் பார்க்க மாட்டீர்களா என்றுதான்! ஓர் அடி கன பரிமாணம் கொண்ட பிளாட்டினக் கட்டியின் எடை என்ன தெரியுமா? அரை டன். ஈயத்தைப் போல இரு மடங்கு கனமுடையது பிளாட்டினம். உலகிலேயே மிகவும் கனமான உலோகம் இது தான். தண்ணீரை விட 21 மடங்கு கனமுள்ளது.

பிளாட்டினம் தனியாகக் கிடைப்பதில்லை. அபூர்வ உலோகங்களான பலாடியம், ரோடியம், இரிடியம், ஓஸ்மியம் ஆகியவைகளோடு கலந்துதான் கிடைக்கிறது. இவைகளுக்குப் பிளாட்டின உலோகங்கள் என்றே பெயர். சில சமயங்களில் தங்கம், தாமிரம், வெள்ளி, இரும்பு, க்ரோமியம், நிக்கல் ஆகிய தாதுக்களோடும் பிளாட்டினம் கலந்து கிடைப்பதுண்டு. சிறு சிறு மணல்களாகவும், செதில்களாகவும், பாளங்களாகவும் பிளாட்டினம் கிடைக்கிறது.

பதினெட்டாம் நூற்றாண்டில் தென் அமெரிக்காவில் பெரு நாட்டில் பெரிய பிளாட்டினப் படிவங்கள் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டன. பல வருஷங்கள் இதன் அருமை பெருமை தெரியாமல் அலட்சியப்படுத்தப்பட்டிருந்தது. அப்போது இதன் விலை மிகவும் மலிவு. நாளாவட்டத்தில் இதன் மதிப்பும் உபயோகமும் தெரிந்த பிறகு, இது கிடைக்காத உலோகமாயிற்று. இதன் விலையும் ஏகமாக உயர்ந்தது. ஓர் அடி கன பரிமாணமுள்ள பிளாட்டினத்தின் விலை என்ன தெரியுமா? ஒரு மிலியன் பவுன்



களுக்கும் அதிகம். தங்கத்தையும்விடப் பிளாட்டினத்தின் விலை அதிகம்.

பிளாட்டினம் அமிலங்களினால் பாதிக்கப்படுவதில்லை. மிக அதிக உஷ்ணத்தையும் தாங்கக் கூடியது. பிராணவாயுவோடு கலப்பதில்லை. துருப்பிடிப்பதில்லை. 3200°F டிகிரியில் (பாரன்ஹீட்) தான் இந்த உலோகம் உருகும். பிளாட்டின உலோகங்கள் என்று மேலே குறிப்பிட்டுள்ளவைகளுடனும் வெள்ளி, தங்கம், தாமிரம், நிக்கல், தகரம் முதலியவைகளுடனும் பிளாட்டினத்தைக் கலந்து கலப்பு உலோகம் (அல்லாய்) தயாரிக்கிறார்கள். உங்கள் அப்பாவிடமுள்ள விலையுயர்ந்த பேனாவின் முனையில் இந்த உலோகம் இருக்கிறது. இருடியமும் பிளாட்டினமும் கலந்த கலவைதான், 'இருடியம் டிப்டு' எனக் கூறப்படும் நிப்புகள். ரசாயனத் தொழிற்சாலைகளில் கொதிகலன்களுக்குப் பிளாட்டினப் பூச்சுக் கொடுக்கிறார்கள். வைத்தியத் துறையில் ஆபரேஷனுக்கான (சர்ஜிகல்) ஆயுதங்கள் இவ்வுலோகத்தினால் செய்யப்படுகின்றன. பல் வைத்தியத்தில் பிளாட்டினமே நேரடியாகப் பயன்படுகிறது. பிளாட்டினம் உப்புக்கள் புகைப்படக் கலைக்கு இன்றியமையாத ஒன்று.

ஆபரணங்கள் செய்வதற்கு முக்கியமாகப் பிளாட்டினம் பயன்படுத்தப்படுகிறது. ஆராய்ச்சிசாலைகளில் நிறுக்கும் சாதனங்களாகவும், உஷ்ண நிலையைச் சரியாகக் கணிக்கும் யந்திரங்களிலும், பிளாட்டினம் உபயோகிக்கப்படுகிறது. மிக நுண்ணிய மின்சாரக் கருவிகளில் 'ப்யூஸ்' ஆகப் பிளாடினம் கம்பிகள் செயல்படுகின்றன. பிளாட்டினத்தினால் ஆன நகைகளைப் பார்த்ததுண்டா நீங்கள்? மிக நுண்ணிய வேலைப்பாடு மிக்க பூவேலைகளைப் பிளாட்டினத்தினால் ஆக்க முடியும். நம் நாட்டில் தங்க நகைகள் எப்படி உயர்ந்ததாகக் கருதப்படுகின்றனவோ, அதேபோல மேலைநாடுகளில் பிளாட்டினத்தினால் ஆன நகைகளுக்கு மவுசும் மதிப்பும் அதிகம். உயர்ந்த ரத்தினங்களை, தங்கத்தைவிடப் பிளாட்டினத்தில் வலுவாகப் பதிக்கலாம். இப்படியாகப் 'பிளாட்டினத்தின் பெருமை சொல்லவும் பெருகுமே' என்று பாராட்ட வேண்டியதுதான்!




"இப்போ நான் சொல்லப்போகும் விஷயம் என்னவென்றால்..."

புகைப்படம்: பி. சுந்தரம்




"கொழந்தே! கொஞ்சம் பின்னாலே தள்ளிக்கோ, என் மடியில் இருக்கும் என் குட்டியும் போட்டோவில் விழட்டும்."

புகைப்படம்: ஓ. எம். பெருமாள்



லே
ாலு!
கற்பனை:
வாண்டு
சித்திரம்:
செல்லம்
வாங்கடா, ஹாக்கி விளையாடலாம். இதுக்கு ரோலர் ஸ்கேட்ஸ் ஹாக்கின்னு பேரு. காலில் சக்கரம் கட்டிக்கிட்டிருக் கறதாலே சும்மாப் பாய்ஞ்சு விளையாடலாம்.
டேய், வாலிகளா! பாதையை விட்டுப் போங்கடா.
பாலு... பாத்து... பாத்து... டப்பா வருது!
ஹ... ஹ... ஹா! இப்ப எப்படி விளையாடு வீங்க? ரோடு நம்மது தம்பி!
இந்தத் தகர டப்பாக் காரை இங்கேயா நிறுத்தணும்?
கிட்டு, உங்க அப்பா கடைக்கு ஓடிப்போய் ஒரே அளவா ரெண்டு "எம்ப்டி" பாக்ஸ் கொண்டு வா, போ! ஒரு ஐடியா....
இப்பப் பாரு வேடிக்கையை. நம்ம ரோலர் ஸ்கேட்ஸ் மேலே ஜாதிக்காய்ப் பெட்டிங்களை வைத்துக் காருக்குக் கீழே நகர்த்தி விடலாம்.
நகர்த்திட்டா...? கார் நகர்ந்துடுமா?
காரோட சக்கரத்திலிருந்து காற்றைப் பிடுங்கி விடறேன். கார் ஜாதிக்காய்ப் பெட்டிமேலே உட்கார்ந்துடும்.



இப்போ இந்தத் தகர டப்பாக்காரை நாம சுலபமாத் தள்ளிக் கொண்டு போகலாம், ரோலர் ஸ்கேட்டோட உதவியாலே. இந்தத் தெருவை விட்டே, நம்ம விளையாட்டுக்கு இடைஞ்சல் இல்லாமக் கொண்டு போய் நிறுத்திடலாம்.
நிறுத்திவிட்டோம் சரி. ஆனா நம்ம ரோலர் ஸ்கேட்டை எப்படி எடுப்பாயாம்? டயர்களுக்குக் காற்று ஊதி உயர்த்த நம்மாலே முடியுமா?
ம்... குழப்பம் தான்! இருஇ ஓடிப்போய் ஒரு உறுதியா னமான கயிறு கொண் வா, போ.
ஐயா, கொஞ்சம் இந்தக் கயிற்றை இழுத்து 'ஹெல்ப்' பண்றீங்களா? ப்ளீஸ்....
ஓ! அவசியம் தம்பி. கொண்டா இப்படி.
ரொம்ப நன்றி ஐயா. அப்படியே இருங்க, விட்டுடாதீங்க. இதை இந்தக் கம்பியிலே கட்டிடறேன்...
இனிமே நாம ஒரு தொல்லையும் இல்லாம விளையாடலாம், வாங்க.
அந்த அப்பளா மூஞ்சி ஆசாமிக்குச் சரியான பாடம். ஹா... ஹா... ஹா!
ஐயோ என் கார்!

தெரியுமா?

229 சினுய் பெனின்ஸுலா எங்குள்ளது?
230 புகழ்பெற்ற ரோல்ஸ் ராய்ஸ் கார்கள் எங்கு செய்யப்படுகின்றன?
231 கார் என்ஜினின் எந்தப் பாகத்தில் பெட்ரோல் ஆவியும் காற்றும் சேர்ந்து சக்தியாக மாறுகின்றன?
232 ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தரமான தலைமைச் செயலகம் எங்குள்ளது?
233 யூதர்களின் மதத்தை ஸ்தாபித்தது யார்?
234 தென் ஆப்பிரிக்காவின் இரு தலைநகரங்கள் என்று குறிப்பிடுவது எவைகளை?
235 பூனைக்கு எத்தனை பற்கள்?
236 புராதன எகிப்திய மன்னர்களைப் பொதுவாக எப்படி அழைப்பார்கள்?
237 பாலிலிருந்து வெண்ணெயை எடுத்த பிறகு அந்தப் பாலுக்கு ஆங்கிலத்தில் என்ன பெயர்?
238 உலகில் மிகப் பெரியதாகக் கருதப்படும் பறவை நெருப்புக் கோழி. அடுத்ததாக...?
239 மான்குட்டியை ஆங்கிலத்தில் எப்படி அழைப்பது?
240 கலைமான் இனத்தில் பெண் மானைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்?
241 நபிகள் நாயகம் பிறந்த இடம் எது?
242 உலகில் வெடி மருந்தைக் கண்டுபிடித்தது எந்த இனத்து மக்கள்?
243 போர்ச்சுகல் நாட்டின் தலைநகர் எது?
244 கம்பளி உற்பத்தியில் உலகில் முதலிடம் வகிக்கும் நாடு எது?
245 சூடானின் தலைநகர் எது?
246 நீர்மூழ்கிக் கப்பலை முதன் முதலில் உருவாக்கியவர் யார்?
247 தாவரங்களுக்குப் பசுமை நிறத்தைக் கொடுக்கும் ரசாயனப் பொருளின்பெயர் என்ன?
248 மிக வேகமாக ஓடக்கூடிய நாயின் பெயர் என்ன?
249 'டாக்ஸி காலஜிஸ்ட்' என்று யாருக்குப் பெயர்? டாக்ஸி ஓட்டுபவருக்கா?
250 ஐரோப்பாவுக்கு ஆரஞ்சுச் செடியை அறிமுகப்படுத்தியவர் யார்?
251 மரத்திலிருந்து கீழே விழும் ஆப்பிளைக் கண்டதும் ஒருவர் ஒரு மகத்தான உண்மையை உலகுக்கு அளித்தார். அவர் பெயர் என்ன?
252 சமாதானத்தின் சின்னமாக விளங்குவது எந்தப் பறவை?
253 அறிவாளி என்பதைக் குறிக்க ஒரு பறவையைப் பயன்படுத்துகிறார்கள். அது எந்தப் பறவை?
254 பெருமை, கர்வம் இவற்றைக் குறிக்க ஒரு பறவையின் உருவைப் போடுவார்கள். அது எந்தப் பறவை?
255 திருடனுக்கு உபமானமாகக் கூறப்படும் பறவை?
256 மிக உயர்ந்த ஒயின் எங்கிருந்து வருகிறது?
257 நியூயார்க்கிலுள்ள எந்தத் தெரு பொருளாதாரத்தோடும் வங்கித் தொழிலோடும் தொடர்புடையது?

விடைகள்:

எகிப்தில்
டெர்பியில்.
கார்பொரேட்டரில்.
நியூயார்க்கில்.
ஆப்பிரஹாம்.
கேப் டவுன், பிரிட்டோரியா.
முப்பது.
பாரோ.
'ஸ்கிம்டு மில்க்'.
ஈமு.
ஃபான்.
'ஹிண்ட்'.
மெக்கா.
சீனர்.
லிஸ்பன்.
ஆஸ்திரேலியா
கார்ட்டோம்.
கார்னீலியஸ் டிரெபெல் -1620ல்
க்ளோரோஃபில்.
'க்ரே ஹவுண்ட்'
விஷங்களைப் பற்றி ஆராய்பவருக்கு.
அராபியர்கள்.
ஸர் ஐசக் நியூடன்.
புறா.
ஆந்தை.
மயில்.
காகம்.
ஷாம்பைன் என்ற இடத்திலிருந்து
'வால்ட் ஸ்ட்ரீட்'



சுண்டு குண்டு சீமாத் தாத்தா

சாமா

"பசங்களா! எனக்குப் பாராட்டு விழா, தெரியுமோ?" என்றார் சீமாத் தாத்தா பெருமையாக. "உங்களுக்கா தாத்தா? எதற்காக?" என்று கேட்டார்கள் சுண்டுவும் குண்டுவும். "போனவாரம் எனக்கு எண்பது வயது முடிந்து சதாபிஷேகம் நடந்ததில்லையா? அதற்காக என்னைக் கௌரவிக்க என் நண்பர் நடராஜன் எனக்கு ஒரு விருந்து வைக்கிறார்."

"விருந்தா பலேபலே! அப்போ எங்களை மறந்துட மாட்டேளே!"

"நீங்க இல்லாமலா? ஆனால் ஒரு கண்டிஷன். அவர்கள் ரொம்ப கௌரவப்பட்டவா. அதனாலே நீங்களும் கௌரவமா நடந்துக்கணும். விருந்திலே அயிட்டங்களெல்லாம் தடபுடலா இருக்கும். எனக்கு ஸ்வீட்டுன்னா ரொம்பப் பிடிக்கும்னு அவருக்குத் தெரியும். அதனாலே நிறைய ஸ்வீட்களும் பட்சணங்களும் பண்ணியிருப்பா. நீங்க 'காஞ்சவன் கம்பங் கொல்லையிலே பூந்த மாதிரி' கொண்டா கொண்டான்னு வாங்கிப் போட்டுக்கப் படாது. எது வந்தாலும் 'போதும்', 'வேண்டாம்', 'அதிகம் இனிமேல் சாப்பிட முடியாது' 'வயிற்றில் இடமில்லே' என்று கௌரவமாகச் சொல்லணும். ஆசை இருந்தாலும் அடக்கிக்கணும். அப்பத்தான் உங்களுக்கும் கௌரவம் எனக்கும் மதிப்பு. தெரிந்ததா? இதுக்குச் சம்மதமானா உங்களையும் அழைச்சுண்டு போவதிலே எனக்கு ஆட்சேபணை இல்லே" என்றார் சீமாத் தாத்தா. குண்டுவும் சுண்டுவும் சம்மதித்தனர்.

"இதோ கொஞ்ச நாழிலே அவர்கள் கார் வரும், என்னை அழைத்துப் போக" என்றார் தாத்தா. சற்றைக்கெல்லாம் ஒரு வேலைக்காரன் வந்தான். "ஐயாவோட கார் ரிப்பேராம். உங்களை டாக்ஸி பிடிச்சு வரச் சொன்னாங்க" என்று கூறிவிட்டுப் போனான்.

வெளியே கிளம்பும்போது லேசாகத் தூறவே சுண்டுவும் குண்டுவும் தங்கள் குடைகளை எடுத்துக் கொண்டனர்.


விருந்து அளிப்பவரின் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். உபசாரம் பலமாக இருந்ததைப் போலவே விருந்தும் பலமாக இருந்தது. வித விதமான பட்சணங்கள் வந்தன. குண்டுவுக்கும் சுண்டுவுக்கும் ஒரே தவிப்பு. ஆனால் தாத்தாவுக்குத் தந்த வார்த்தையைக் காப்பாற்றுவதற்காகப் 'போதும், போதும்! வேண்டாம்' என்று கையை மறித்துக் கௌரவமாக நடந்து கொண்டார்கள். ஆனால் பட்சணத் தட்டு தாண்டிப் போனதும் தாபப்பட்டார்கள். சீமாத் தாத்தாவுக்கு ரொம்பப் பெருமையாக இருந்தது, தம் பேரக் குழந்தைகளைப் பற்றி. ஆனால் பேரக் குழந்தைகளுக்கோ ஒரே ஏக்கம். விருந்து முடிந்து எல்லோரும் எழுந்தார்கள். சுண்டுவும் குண்டுவும் "நீங்க போங்கள், நாங்கள் கொஞ்சம் நிதானமாக இருந்து சாப்பிட்டு வருகிறோம்" என்றார்கள்.

பரிமாறப்பட்ட பலகார பட்சணத் தட்டுக்கள் அவர்கள் அருகில்தான் இருந்தன. "'எத்தனை நல்ல குழந்தைகள். எதுவுமே வேண்டாமென்று கூறிவிட்டார்களே' என்று அவர்களிடம் வீட்டாருக்கு நல்ல மதிப்பு.

கூடத்தில் எல்லோரும் அமர்ந்து தாம்பூலம் தரித்துக் கொண்டிருந்த போது சுண்டுவும் குண்டுவும் கையலம்பிக்கொண்டு குடைகளுடன் தாத்தாவின் அருகே வந்து அடக்கமாக அமர்ந்து கொண்டார்கள். சற்று நேரத்துக்கெல்லாம் தாத்தா விடைபெற்றுக் கொண்டார். வெளியே வந்த போது மழை தூறலாயிற்று. சட்டென்று குண்டுவின் குடையை வாங்கிப் பிரித்த சீமாத் தாத்தாவின் மீது...? ஜாங்கிரிகளும் குஞ்சாலாடுகளும், மைசூர்ப் பாகுகளும், வடைகளுமாக விழுந்து அபிஷேகம் செய்தன! சுண்டுவின் குடையை வாங்கினார். அதுவும் கனத்தது. சுற்று முற்றும் பார்த்தார் தாத்தா. நல்லவேளை வீட்டுக்காரர் வாசலுக்கு வரவில்லை, வழியனுப்ப. தாத்தாவுக்குப் பேரன்களின் வேலைத்தனம் புரிந்துவிட்டது. 'ம்...' என்று கர்ஜித்தார் தாத்தா. குண்டு உருண்டோடிக் கிடந்த பட்சணங்களைக் குடைக்குள் அள்ளிப் போட்டுக் கொள்ள "வீட்டுக்கு வாங்க பேசிக்கிறேன்" என்று கறுவியபடியே மழையில் நனைந்தபடி வீதியில் இறங்கினார் டாக்ஸி பிடிக்க.

'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக, ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: சதாசிவம்.

வாழ்வே மென்மையின் உருவகம்



'க்ளிக்' அடித்துவைப்பீர்...நிரந்தரம்

எப்போதுமே உங்கள் கையோடிருக்கட்டும் தப்பாத் துணையான க்ளிக் III. மறைந்தோடும் வாழ்வின் மணியான கணங்களை நிரந்தரமாக்கிக் காப்பீர்— நினைவுமுகம் கண்முன் நிற்பதற்கே.

'இலக்கு வைத்ததும் சடக்' என எடுக்கவே ஆக்பா க்ளிக். காரியத் தகுதி வாய்ந்தது. உண்மை தவறாதது. கையாள எளிது. சிக்கனமிக்கது.

- 120 பிலிம் ரோல் ஒவ்வொன்றுக்கும் பெரிது பெரிதாக (6 x 6 செமீ.) படங்களைப் பெறுவீர்கள்.
- சிறப்பானதோர் தயார்த் தோலுறை, போர்ட்ரெய்ட் லென்ஸ், ஃப்ளாஷ்கன் ஆகியவை மேற்கொண்டு தனிவிலைக்குக் கிடைக்கும்.


தெள்ளத் தெளிவான பிரிண்டுகளுக்கும், என்லார்ஜ்மெண்டுகளுக்கும் கண்டிப்புடன் கோருவீர் ஆக்பா-கேவார்ட் போட்டோத் தாள்களை.

அனுமதிபெற்ற எல்லா ஆக்பா-கேவார்ட் விற்பனையாளர்களிடமும் கிடைக்கும்.

ஆக்பா-கேவார்ட் AG லீவர்குஷன் அவர்களின் கூட்டுறவோடு இவற்றைத் தயாரிப்போர்: தி நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்.

விலை
ரூ. 56.25
(எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டது. இதர வரிகள் தனி).

SIMOES-AG-11-TAM



ஏகபோக விநியோகஸ்தர்கள்:
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்
பம்பாய் • நியூ டெல்லி • கல்கத்தா • சென்னை.

புகைப்பட சாதனங்களின் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவார்ட், ஆன்ட்வெர்ப்/ லீவர்குஷன் ஆகியோரின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.

ஆக்பா க்ளிக—இந்தியாவின் உன்னதப் புகழ்பெற்ற காமிரா.


ருசியானவை...அருமையானவை...பிரமாதமானவை
25 பைசாதான்!
PARLE
POPPINS
MIXED FRUITY SWEETS
25 Paise
புதிய பார்லே பாப்பின்ஸ்
பழரச மிட்டாய்கள்
எலுமிச்சை, ஆரஞ்சு, சாத்துக்குடி, அன்னாசி மற்றும்
ராஸ்ப்பெர்ரி ஆகிய ஐந்து பழரசச் சுவைகளில் ருசிமிக்க
13 மிட்டாய்கள்—குறைந்த விலை கொண்ட கையடக்கமான
பேக் ஒவ்வொன்றிலும்!
பாப்பின்ஸ் சுவையுங்கள்— பழரசச் சுவையை அனுபவியுங்கள்